கிராம நலம்

(மாதப் பத்திரிகை)

சென்னை அரசாங்க சமுதாய அபிவிருத்தி
இலாகா வெளியீடு

மாடி—1 | ஆகஸ்ட், 1956 | படி—11

ஒவ்வொரு குடும்பமும் முன்னேற வழி

விஞ்ஞான ரீதியில் விவசாயத்தை நடத்தி அதிக வருமானம் பெறவும், உப தொழில்கள் மூலம் பொருள் வளத்தைப் பெருக்கவும், மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்கவும், வருஷாந்திர திட்ட மொன்றை ஒவ்வொரு குடும்பமும் உருவாக்கி நிறைவேற்றப் பயிற்சி அளிக்கவேண்டும். இதற்கான பூர்வாங்க வேலைகள் யாவற்றையும் மேற்கொள்ள வேண்டியது, சமுதாய அபிவிருத்தித் திட்ட ஊழியர்களின் கடமையாகும்.

தேசிய வளர்ச்சித் திட்ட வேலைகள் கூட்டுறவு முறையில் நடைபெற வழி செய்யவேண்டும். கடன் கொடுப்பதற்கான ஆஸ்திப் பொறுப்பில்லாத கிராம வாசிகளுக்கு கிராம சபை முன்னின்று கடன் வசதி செய்து கொடுத்து, கடன் தொகைகளை அவ்வப்போது ரொக்கமாகவோ, தானியமாகவோ, தக்க தவணைகளில் வசூலித்துக்கொள்ள முன்வரவேண்டும்.

ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரி.

(நைநிடால் மா நாட்டு சொற்பொழிவின் ஒரு பகுதி.)

சிந்தனைக்குத் தூண்டுகோல்

[ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி, கூட்டு அபிவிருத்திக் கமிஷனர்]

அன்புள்ள சக ஊழியர்களுக்கு,

நமஸ்காரம். சென்னை அரசாங்க சமுதாய அபிவிருத்தி இலாகா வெளியிட்டுவரும் "கிராம நலம்" மாதப் பத்திரிகையை எல்லா கிராம சேவகர்களும் தவறாது படித்து வருவீர்களென்று நம்புகிறேன். "கிராம நல"த்தைப் போலவே, "கிராம சேவக்", "குருக்ஷேத்ரா" என்ற இரண்டு மாதாந்திர ஆங்கிலப் பத்திரிகைகளை டில்லியிலிருந்து சமுதாய நல இலாகா வெளியிட்டு வருவதும் உங்களுக்குத் தெரியும். இப் பத்திரிகைகளில், நம்முடைய வேலைக்கு வேண்டிய ஊக்கமும், உற்சாகமும் தரும் நல்ல நல்ல விஷயங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இப் பத்திரிகைகளில், கிராம சேவகர்களும் சமுதாய அபிவிருத்தி இலாகாவைச் சேர்ந்த மற்ற ஊழியர்களும் தங்கள் தங்கள் அனுபவங்களை வெளியிட்டு வருகிறார்கள். இந்த விஷயங்களை ஆழ்ந்து படித்தும், அதைப் பற்றிச் சிந்தித்தும், சக ஊழியர்களுடன் விவாதித்தும் வருவீர்களானால், அது உங்களுடைய வேலைகளுக்கு மிகவும் பயனுடையதாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

"இதற்கெல்லாம் எங்கே நேரம் இருக்கிறது? மேலதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்றவேண்டி அங்குமிங்கும் அலைந்துதிரியும் எங்களால் புத்தகம், பத்திரிகை முதலியவை படிப்பது எப்படி முடியும்?" என்று எண்ணும் ஊழியர்கள் இருப்பார்களாயின், அவர்களுக்கு ஒரே வார்த்தை. "வேலை மிகுதியால், உண்பதற்கோ உறங்குவதற்கோ நேரமில்லை" என்று எத்தனையோ பேர் சொல்லக் கேட்டிருப்பீர்கள். ஏதோ ஒரு சில நாட்கள் அப்படி இருக்கலாம். மறுக்கவில்லை, "ஆனால் ஒரு வாரம் பூராவும், அல்லது ஒரு மாதம் முழுவதும், உண்ணாமலும் உறங்காமலும் நேரமில்லாமல் வேலை செய்கிறோம்" என்று யாராவது சொன்னால், அதை யாராவது உண்மை என்று நம்புவார்களா?

நம்முடைய வேலைகளுக்கென்று வெளிவரும் பத்திரிகைகள் புத்தகங்கள் இதர பிரசுரங்கள் ஆகியவற்றைப் படிப்பதற்கென்று, உங்களுடைய தினசரி கால அட்டவணையில் ஒரு நேரம் ஒதுக்கிவைப்பது அத்யாவசியம் என்பதை நீங்கள் நன்கு உணரவேண்டும். "கற்றனைத்தூறும் அறிவு" என்பது, அனுபவ வாயிலாகக் கண்டறிந்த பொய்யாமொழி. நமது வேலைகளுக்கான அறிவும் ஆற்றலும் வளரவேண்டுமாயின், தினசரி ஏதாவது ஒரு நல்ல புத்தகத்தையோ அல்லது பத்திரிகையையோ சிறிது நேரம் படிக்கவேண்டும். படித்த விஷயத்தைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். இந்தப் பழக்கத்தை, ஏற்படுத்திக் கொள்வது நல்லது. (பத்திரிகை என்று நான் குறிப்பிடுவது, தினசரி பத்திரிகைகளையோ, வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் படிக்கப்படும் பத்திரிகைகளையோ அல்ல. அவற்றை யாரும் சொல்லாமலே, எல்லோரும் படிப்பது அன்றாடக் கடமையாகிவிட்டதல்லவா?) சிறு தொந்திரவுகளை, மனக்குழப்பங்கள் இவற்றில் ஆழ்ந்து நம்முடைய வேலைகள் கெடாமல் இருப்பதற்கு, நம் சேவைக்கு ஊன்றுகோலாக, தமிழ் வேதமாகிய திருக்குறள், உபநிஷத் சாரமாகிய பகவத்கீதை ஆகிய வற்றை இடைவிடாமல் படிப்பது, மிகவும் உதவியாக இருக்கும்.

சென்ற ஒரு மாத காலமாக, "கீதைப் பேருரைகள்" என்ற புத்தகத்திலிருந்து, தினந்தோறும் ஒரு பகுதி படித்து வருகிறேன். சில வருஷங்களுக்கு முன்பு, வினோபாஜி அரசியல் கைதியாக இருந்தபோது, அங்கிருந்த தன் நண்பர்களுக்கு 'பகவத் கீதை'யைப்பற்றி நிகழ்த்திய விரிவுரைகளே, இந்நூலில் அடங்கியுள்ளன. நான் இப் புத்தகத்தைப் படிக்கும்போதெல்லாம் கிராம சேவையில் ஈடுபட்டுள்ள நம்போன்றவர்களுக்காகவே ஏற்பட்டுள்ள புத்தகம் என்று எண்ணுகின்றேன். அவ்வளவு உபயோகமாகவும் அனுபவபூர்வமாகவும் உள்ளத்தைத் தொடக்கூடியதாகவும் அமைந்துள்ளது. இந்நூல் விலை ரூபாய் ஒன்று. சர்வோதய பிரசுராலயம், திருப்பூர் என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சமுதாய நல நிர்வாகஸ்தர் ஸ்ரீ S. K. டே அவர்கள், ஒரு சாதாரண 'கிராம சேவக்' செய்யும் வேலையைக் கற்றுக்கொள்ளும் நோக்கத்தோடு (அனுபவபூர்வமாக உணர்வதற்காக) மேற்கொண்ட முயற்சியைக் குறித்து 'கிராம சேவக்' என்ற பத்திரிகையில் வெளிவந்துள்ள கட்டுரையை நீங்கள் படித்திருக்கலாம். நேருஜியின் சிறந்த அறிக்கைகள், மதிப்பீட்டு அறிக்கையின் விவரம் முதலியன, "குருக்ஷேத்ரா"வில் வெளிவந்துள்ளன. இவையெல்லாம் நம் அறிவையும் அனுபவத்தையும் வளம்படுத்தும் சக்திவாய்ந்தவை. வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், மாதாந்தரக் கூட்டங்களில், தங்கள் சகஊழியர்களுடன், இதுபோன்ற முக்கிய விஷயங்களைக் குறித்து, குறைந்தது 15 நிமிஷமாவது விவாதிக்கலாம். இதன்மூலம் எல்லா சகஊழியர்களும் இலாகா வெளியிடும் பத்திரிகைகள் படிப்பதிலும், ஆத்மார்த்த நூல்களைப் படிப்பதிலும் அதிக அக்கறை செலுத்த வழி ஏற்படும்.

சென்னை விவசாயிகளின் அகில இந்திய யாத்திரை

அறிவிப்பும் வேண்டுகோளும்

சென்ற இதழில் இதைப்பற்றிய குறிப்பு வெளியானது நேயர்களுக்கு நினைவிருக்கும். இது விஷயமாக இப்போது தேதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. அதாவது, இவ் வருஷம் அக்டோபர் 15-ம் தேதி சென்னையிலிருந்து விசேஷ ரயில் புறப்படும். பிரயாண நாட்களும், செலவும் ஓரளவு அதிகரிக்கப்பட்டுள்ளன. குறைந்தது 45 நாட்கள் இருந்தால்தான், கிழக்கே கல்கத்தா முதல், மேற்கே அமிர்தசரஸ் வரையிலும், வடக்கே ஹரித்துவாரம் முதல், தெற்கே இராமேஸ்வரம் வரையிலுமுள்ள ஊர்களை ஒருவாறு பார்க்க இயலும். மற்ற ராஜ்ய பிராயண கோஷ்டிகளும் அவ்வாறே செய்துள்ளன.

இந்தப் பிரயாணத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள ஊர்களின் பெயர் பின் வருமாறு :—

விஜயவாடா, விசாகப்பட்டினம், புவனேஸ்வர், டாடாநகர், கல்கத்தா, சித்தரஞ்சன், சிந்திரி, கயா, நாக்பூர், அலகாபாத், லக்ஷ்மணபுரி, ஹரித்துவார், நங்கல் அணை, அமிர்தசரஸ், டெல்லி, வட மதுரை, ஆக்ரா, சான்சி, எல்லோரா-அஜந்தா, நாஸிக், பம்பாய், பூனா, ரெய்ச்சூர், பெங்களூர், மைசூர், மேட்டூர், கோயம்பத்தூர், உதகமண்டலம், பழனி, காந்தி கிராமம், மதுரை, தனுஷ்கோடி, ராமேஸ்வரம், திருச்சி-திருவரங்கம், தஞ்சாவூர், சிதம்பரம், நெய்வேலி.

இந்த ஊர்களில் ஒவ்வொன்றிலும், குறைந்தது ஒவ்வொரு நாள், விசேஷ ரயில் தங்கும். இரவெல்லாம் பிரயாணத்தில் கழியும். கல்கத்தா, டெல்லி, பம்பாய், ஹரித்துவாரம், ஆகிய இடங்களில் இரண்டு நாட்கள் தங்கும். எவ்வளவு சிக்கனமாகத் திட்டமிட்டபோதிலும் 45 நாட்களுக்கு குறைவதாகக் காணோம். ஆகவே, பிரயாணச் செலவும், காலமும் நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

விஷேச ரயிலுக்கான கட்டண சலுகைகளை அரசாங்கம் அளிக்கும். ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி, உணவு ஏற்பாடுகளை பிரயாணம் செய்யும் விவசாயிகளே, கூட்டுறவு முறையில் ஒரு விசேஷக் கமிட்டி மூலம் செய்துகொள்ள வேண்டும். எனவே, உணவுச் செலவு உட்பட ரயில்வேக் கட்டணத்தோடு சேர்த்து, நபர் ஒன்றுக்குக் குறைந்தது 250 ரூபாய் செலவு ஏற்படலாம்.

எனவே, ஆகஸ்ட் மாதம் 20-ந் தேதிக்குள் இத் தொகையை சேகரித்து வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்தந்த வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், ஏற்கெனவே பெயர்களைக் கொடுத்தவர்களுக்கு இந்தத் தகவலை எடுத்துக்கூறி, பிரயாணத்துக்கு அவர்களைத் தயாராகச் சொல்வார்களென்று நம்புகிறேன். இது விஷயமாக விசேஷ அறிக்கைகளும் மற்ற விவரங்களும் அவ்வப்போது வட்டார அபிவிருத்தி அதிகாரிகளுக்கும் தகவல் கோரி எழுதுவோருக்கும் அனுப்பப்படும்.

பொதுஜனத் தொடர்பு அதிகாரி, சென்னை-9

கிராம அபிவிருத்திக் கண்ணாடி

மூன்றுமாத அறிக்கை வெளியிடும் தகவல்

[சென்னை ராஜ்யத்திலுள்ள 79 அபிவிருத்தித் திட்ட வட்டாரங்களில் நடைபெற்று வரும் எல்லா கிராம நல வேலைகளைப்பற்றியும் மூன்று மாதத்திற்கொரு முறை விளக்கமான ஆராய்ச்சி நடக்கிறது. நம் ராஜ்யத்தின் புள்ளி விவர சேகரிப்பு இலாகா டைரக்டர் ஸ்ரீ ராஜபூஷணம் மேற்பார்வையில், இப் பரிசீலனை விஞ்ஞான முறையில் திறம்பட நடைபெறுகிறது. இத் தகவல்கள் மூலம், 1956 ஜனவரிக்கு முந்திய மூன்று மாத அபிவிருத்தியை விட 1956 ஜனவரி முதல் மார்ச்சு வரையுள்ள மூன்று மாத காலத்தில், சில அம்சங்களிலே முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது தெரிய வருகிறது. இந்த அறிக்கையின் சுருக்கத்தை அடிஷனல் அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ N. E. S. ராகவாச்சாரி அவர்கள், புது டில்லியிலுள்ள சமுதாய இலாகா தலைமை அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

—ஆசிரியர்]

சென்னை ராஜ்யத்திலே சுமார் 14,720 சதுர மைல் பரப்புள்ள 79 வட்டாரங்களில் 1956-ம் ஞூ ஜனவரியீ முதல் மார்ச்யீ வரை நடைபெற்ற அபிவிருத்தி வேலைகளின் பயனாக, அவ்வட்டாரங்களில் வாழும் சுமார் 91 லட்சம் மக்களின் வாழ்க்கையில் சிறந்த முன்னேற்றம் காணப்படுகிறது.

விவசாய முன்னேற்றம்

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதே அரசினரின் நோக்கமாகும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், விவசாய முன்னேற்றம் முக்கிய அம்சமாக விளங்குகிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டங்களிலும், இத்துறையே முக்கியமாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. 1955-ம் ஞூ அக்டோபர்-டிசம்பரில் சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் 2,12,353 மணங்கு உரம் விநியோகிக்கப்பட்டது. 1956-ம் ஞூ ஜனவரி-மார்ச்சில் இந்த உர விநியோகம் ஏறக்குறைய இரட்டித்து விட்டது என்று கூறலாம். அதாவது, அந்த மூன்று மாத காலத்தில் 4,09,569 மணங்கு உரம் விநியோகிக்கப்பட்டது. அத்துடன், சீர்திருந்திய விவசாயக் கருவிகள் 1,647-ம் விநியோகிக்கப்பட்டன. பசுந்தாளுரச் செடிகள் எல்லா வட்டாரங்களிலும் பயிரிடப்படுகின்றன.

[குறிப்பாக, மூன்று வட்டாரங்களிலே 10,884 ஏக்கர் பரப்பில், செஸ்பேனியா தழையுரச் செடி பயிரிடப்பட்டது. ஜப்பானிய நெல் சாகுபடி முறை ஆறு வட்டாரங்களிலே, 2,307 ஏக்கர் பரப்பில் வெற்றிகரமாக பின்பற்றப்பட்டது.]

சமுதாய நலத் திட்ட பெரும் வட்டாரங்கள், சமுதாய அபிவிருத்தி வட்டாரங்கள், தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்கள்—ஆகிய எல்லா அபிவிருத்தி வட்டாரங்களிலும், 1956 ஜனவரி—மார்ச்சில் மொத்தம் 13,293 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. விவசாயத்தில், சீர்திருத்தப் பண்ணை முறைகளை கிராம மக்கள் எளிதில் புரிந்துகொள்வதற்காக, அவர்கள் முன்னிலையில், நிதர்சனமாகப் பல பண்ணை முறைகள் விளக்கிக் காட்டப்பட்டன. இதற்காக, 1956 ஜனவரி—மார்ச்சில் 7,077 நிதர்சன பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன் பழத்தோட்ட சாகுபடி மொத்தம் 4,071 ஏக்கராவிலும், காய் கறித்தோட்ட சாகுபடி 2,613 ஏக்கராவிலும் ஆரம்பிக்கப்பட்டன. 2,598 ஏக்கர் தரிசு நிலம், சாகுபடிக்குகந்த நிலமாகப் பண்படுத்தப்பட்டது. கூடுதலாக 13,500 ஏக்கர் நிலத்துக்கு, பாசன வசதி அளிக்கப்பட்டது. ஒன்பது வட்டாரங்களில், சுமார் 1,84,679 ரூபாய் கடனாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மின்சார வசதி

சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில், மின்சார வசதி எல்லா கிராமங்களுக்கும் கிட்டச் செய்வதற்காக நிறைவேற்றப்படும் அபிவிருத்தி வேலைகளில் சிறந்த முன்னேற்றம் காணப்படுகிறது. 1956 ஜனவரி—மார்ச்சில், கீழ்பவானி பிரதேசத்தில் மட்டும், 10 மின்சார விஸ்தரிப்புத் திட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. இதுவரை, மின்சார விஸ்தரிப்புக்காக 2,92,272 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

மதுரை ஜில்லாவிலுள்ள ஆத்தூர் வட்டாரத்தில், மின்சார இலாகாவினர், மின்சார விஸ்தரிப்புக்காக 96,000 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள்.

கால்நடை விருத்தி

சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில், 1956 ஜனவரி—மார்ச்சில், மொத்தம் 1,24,904 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. நோயுற்ற 69,584 பிராணிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. இனத்தரமிகுந்த ஆடு, மாடுகள் 68-ம், கோழி, வாத்துகள் 3,054-ம் கிராம மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

சுகாதார வசதி

சமுதாய நலத்திட்ட வட்டாரங்களில், 1955 அக்டோபர்–டிசம்பரிலே, 2,126 வடிசாக்கடைக் குழிகள் அமைக்கப் பட்டன. 1956 ஜனவரி–மார்ச்சில், 4,272 வடிசாக்கடைக் குழிகள் தோண்டப்பட்டன. கிராம கக்கூசுகள் 755 கட்டப் பட்டன. மொத்தம் 30,715 கெஜ நீளத்துக்கு, வடி சாக்கடைக் கால்கள் அமைக்கப்பட்டன. சுகாதார ரீதியில் குடிநீர் விநியோகத்துக்கான அபிவிருத்தி வேலைகள், பல வட்டாரங்களில் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. இவ்வேலைகளுக்காக, கிராம மக்கள் 3·9 லட்சம் ரூபாய், தங்கள் பங்காக அளித்திருக்கிறார்கள். திட்ட நிதியி லிருந்து 4·2 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 222 கிணறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

கல்வி முன்னேற்றம்

புதிய பள்ளிகள் 99, 1956, ஜனவரி–மார்ச்சில், சமுதாய நலத்திட்ட வட்டாரங்களில் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு முந்திய மூன்று மாத காலத்தில், 91 பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. 194 ஆரம்பப் பள்ளிகள் 1956 ஜனவரி–மார்ச்சில், ஆதார பள்ளிகளாக மாற்றப்பட்டன. அதற்கு முந்திய மூன்று மாத காலத்தில், 97 ஆரம்ப பள்ளிகள் ஆதார பள்ளிகளாக மாற்றப்பட்டன. 1955 அக்டோபர்–டிசம்பரில், 263 முதியோர் பள்ளிகள் ஆரம் பிக்கப்பட்டன. 1956, ஜனவரி–மார்ச்சில், 432 முதியோர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த மூன்று மாத காலத்தில், வயது வந்தோர் 13,893 பேருக்குக் கல்வி போதிக்கப்பட்டது. 381 மக்கள் மனமகிழ் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

சமுதாய நலத்திட்ட வட்டராங்களிலே, 1956, ஜனவரி–மார்ச்சில், 55 கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

போக்குவரத்து வசதி

திட்ட வட்டாரங்களிலே, 1955, அக்டோபர்–டிசம்பரில் மொத்தம் 164 மைல் நீளத்துக்குக் கெட்டித்த பாதை களும், 161 மைல் நீளத்துக்கு சாதாரண பாதைகளும் அமைக்கப்பட்டன. 1956, ஜனவரி–மார்ச்சில், மொத்தம் 205 மைல் நீளத்துக்கு கெட்டித்த பாதைகளும், 196 மைல் நீளத்துக்கு சாதாரண பாதைகளும் அமைக்கப் பட்டன.

1956 ஜனவரி–மார்ச்சில் 1,107 வீடுகள், திட்ட வட்டாரங் களிலுள்ள கிராமங்களில் கட்டப்பட்டதுடன், 1,242 வீடுகள் புதுப்பிக்கப்பட்டன.

கிராமத்தொழில் வளர்ச்சி

கிராமத் தொழில்களில் மிகவும் பிரதானமாக விளங் குவது கதர் உற்பத்தி. கீழ் பவானி பிரதேசத்தில் கதர் தொழிலபிவிருத்திக்காக, சுமார் ஆயிரம் சர்க்காக்கள் விலைக்கு வாங்கப்பட்டன. இவ்விதம் சர்க்காக்களை விலைக்கு வாங்கிமக்களிடையே விநியோகித்ததோடு நின்றுவிடவில்லை, "கதர் நூலை நூற்பதெப்படி?" என்பதை அவர்களுக்குக் கற்றுத் தருவதற்கும் அரசினர் திட்டம் வகுத்துள்ளனர். இராட்டையில் நூற்பதற்கும், பஞ்சை சுத்தம் செய்வதற் கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ள நூற்பு போதகர்கள் கிராமங் களுக்குச் சென்று, மக்களுக்கு நூற்பதுபற்றிச் சொல்லித் தருவது வழக்கம். இம்மாதிரியாக, கதர் தொழில் வளம், கீழ் பவானி சமுதாய நலத்திட்ட வட்டாரத்தில் பெருகுவதற்கு, அரசினர் சுமார் 56,704 ரூபாய் செலவு செய்ய அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆத்தூரிலும், பல்லடத்திலும், கதர் தொழிலபிவிருத்திக்காக, அரசினர், 1956 ஜனவரி–மார்ச்சில் முறையே, 5,130 ரூபாயும், 5,892 ரூபாயும் செலவு செய்திருக்கிறார்கள். அதே காலத் தில், சுமார் 1,311 ரூபாய் பெறுமான கதர் பைந்தூர் வட்டாரத்தில் விற்கப்பட்டிருக்கிறது; சின்ன சேலம் வட்டாரத்திலோ, 2,885 ரூபாய் பெறுமான கதர் விற்கப் பட்டிருக்கிறது. திருக்கழுக்குன்றம் வட்டாரத்தில், தீவிர கதர் உற்பத்தித் திட்டம் அமலாகியிருக்கிறது. இதுவரை இவ்வட்டாரத்தில், 200 சர்க்காக்களும் 170 பவுண்டு பஞ்சும் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வட்டாரத்துக் கிராம மக்கள், மிகவும் உற்சாகத்துடன் கதர் உற்பத்தியில் ஈடு பட்டு, 211 சிட்டம் கதர் நூலை உற்பத்தி செய்திருக் கிறார்கள்.

வார்தா செக்கு

வார்தா செக்கு மூலம் எண்ணெய் பிழிவது சிக்கனமான முறை. சீர்திருந்திய முறையும் கூட. ஆகையால் வார்தா செக்குகளை, சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் பிரபலப் படுத்துவதும் அரசினரின் நோக்கமாகும். கீழ் பவானி பிரதேசத்திலுள்ள சிவகிரியில், வார்தா செக்கு நிதர்சன பயிற்சி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. இந்நிலை யத்தை நிர்மாணித்து நடத்த, அரசினர் 5,000 ரூபாய் அனுமதித்திருக்கின்றனர். குருவிக்குளம், திருவள்ளூர், வேதாரணியம், மலம்புழா முதலிய வட்டாரங்களில் நிர் மாணிக்கப்பட்டுள்ள நிலையங்களும் சிறப்பாக நடந்து வரு கின்றன. எண்ணெய் உற்பத்தித் தொழிலபிவிருத்திக் காக, 1956 ஜனவரி–மார்ச்சில் வேதாரணியம் வட்டாரத்தில் 3,201 ரூபாயும், குருவிக்குளம் வட்டாரத்தில் 6,011 ரூபா யும், திருவள்ளூர் வட்டாரத்தில் 2,503 ரூபாயும், மலம் புழா வட்டாரத்தில் 9,061 ரூபாயும் செலவு செய்யப் பட்டிருக்கிறது. பெரம்பலூர் வட்டாரத்தில், எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம், எண்ணெய் பிழிவோருக்குக் கடன் வழங்கப்படுகிறது. முசிறியில் பழைய செக்கு, வார்தா செக்காக மாற்றப்பட்டிருக் கிறது.

மாதிரி பட்டறைகள்

இரும்புப் பட்டறைகள் கிராமங்களில் நிறுவப்படுவது மிகவும் அவசியம். விவசாயக் கருவிகளையும், மாட்டு வண்டிச் சக்கரங்களில் பிணைக்கப்பட்டிருக்கும் இரும்பால் செய்யப்பட்ட பாகங்களையும் அப்போதைக்கப்போது பழுது

பார்த்துச் சீர் செய்யவேண்டியதிருக்கிறது. பழைய பாணியில் இயங்கும் பட்டறைக்கும் நவீன காலத்திய பட்டறைக்கும் பலத்த வித்தியாசமுண்டு. தச்சுத்தொழில் பெருகுவதற்கு, நவீன கருவிகளும் தேவைப்படுகின்றன. நவீன பாணியில் மாதிரி பட்டறை பயிற்சி நிலைய மொன்றை கீழ் பவானி பிரதேசத்திலுள்ள கரட்டிபாளையத்தில் நிறுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. நிலைய கட்டிட வேலை மும்முரமாக நடைபெற்று வருகிறது. மேலும், தச்சு, கொல்லுத் தொழில் பயிற்சி நிலையகட்டிடம் ஒன்று, கீழ் பவானி பிரதேசத்திலுள்ள கஸ்தூரிபாய் கிராமத்தில் கட்டப்பட்டு வருகிறது.

பனைவெல்ல உற்பத்தி

உணவுச் சத்தின் தரத்தைக்கொண்டு மதிப்பிட்டால், வெள்ளைச் சர்க்கரையைவிட, பனைவெல்லமும் பனைவெல்லச் சர்க்கரையும் சிறந்தவை எனத் தெரிகிறது. கிராமங்களில் பனைவெல்ல உபயோகம் பெருகிவருகிறது. அதைத் தொடர்ந்து, பனை வெல்ல உற்பத்தியும் பெருகிவருகிறது. இந்த உற்பத்தி பெருகுவதன் மூலம், முன்னாளைய கள்ளிறக்குவோர்கள் அநேகருக்கு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சமுதாய நலத்திட்ட நிதியிலிருந்து, 38,525 ரூபாய் பனைவெல்ல உற்பத்தித் தொழிலுக்காகச் செலவு செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. கீழ் பவானி பிரதேசத்தில் மட்டும், பனைவெல்லம் காய்ச்சுவதற்குரிய உலைகள் 177 நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

இதர தொழில்கள்

தோல் சாமான்களைத் தயாரிப்பதற்குரிய பயிற்சி நிலையமொன்று கீழ் பவானி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு விட்டது. இலாடங்களைத் தயாரிப்பதற்கும், இப் பிரதேசத்தில், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது பண்ருட்டியிலும், இம்மாதிரிப்பட்ட பயிற்சி நிலையமொன்று நிறுவப்படும். மூங்கில் சாமான்கள் தயாரிப்பதற்கும், பனைமரவெட்டுத் தொழில் வளம் பெருகுவதற்கும், கீழ் பவானி பிரதேசத்தில் பலத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. காகிதத்தை உபயோகித்து விளையாட்டுப் பொம்மைகளையும் சாமான்களையும் தயாரிப்பதற்காக, முசிரி வட்டாரத்திலுள்ள புலிவலம் கிராமத்தில் நிறுவப்பட்டிருக்கும் நிலையத்தில் வேலை துவங்கி விட்டது. சேலம் ஜில்லாவிலுள்ள ஆத்தூர் வட்டாரத்தில் கம்பளி நெசவு தொழிலுக்குரிய அபிவிருத்தி வேலைகள் மும்முரமாக நடந்து வருகின்றன. கிருஷ்ணகிரி வட்டாரத்திலோ, பட்டு உற்பத்தியைப் பெருக்க வற்பாடாகியிருக்கிறது. கிராம மக்கள், தேனீக்களை வளர்க்க, சுமார் 1,000 தேனீக்கூண்டுகள், அவர்களுக்குப் பாதி விலையில் வழங்கப்பட்டிருக்கின்றன.

கதர், எண்ணெய் உற்பத்தி, விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்பு, மூங்கில் சாமான்கள் தயாரிப்பு, தோல் சாமான்கள் தயாரிப்பு போன்ற பல கிராமத் தொழில்கள், சமுதாய நலத் திட்ட வட்டாரங்களிலே செழித்தோங்கி வளர, அரசினர் திட்டங்கள் பலவற்றை வகுத்து, அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றனர்.

இவ்வாறாக, ஒவ்வொரு துறையிலும் தீவிரமான அபிவிருத்தி ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இந்த வேகம் குறையாமல், எல்லோரும் ஒத்துழைத்து மேலும் சிறந்த பலன்களைக் காண முயல்வார்களென்று நம்புகிறோம்.

திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு ஜூன் மாதத்தில், கிராம மக்கள், இஷ்ட பூர்வமாக உழைத்து, தோலச்சேரி ஹரிஜன பாதையை ஒரு பர்லாங் நீளத்துக்கும், வரம்பியத்தில் சேரி பாதையை ஒரு பர்லாங்கு நீளத்துக்கும் அமைத்தார்கள். மேலும் அவர்கள், ஆதனூர் சேரி பாதை, சித்தை மூரிலுள்ள தியாகராஜபுரம் பாதை, மணக்குடியிலுள்ள தெருக்கள் முதலியவற்றையும் சீர்திருத்திச் செப்பனிட்டார்கள். ஐந்து குளங்கள் ஆழப்படுத்தப்பட்டன. 4 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன. 93 சேரிகள் துப்புரவு செய்யப்பட்டன. 30 வடி சாக்கடைக் குழிகள் தோண்டப்பட்டன. 32 மணங்கு உரம் விநியோகிக்கப்பட்டது. கனி தரும் மரக் கன்றுகள் 552-ம், இதர மரக்கன்றுகள் 643-ம் நடப்பட்டன. 500 தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு, நடப்பட்டன. 5 வடிமுனை குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன. 110 கால்நடைப் பிராணிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. 394 மாடுகளுக்கு சப்பை நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், 487 மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. நூற்போரிடமிருந்து 202 சிட்டம் கதர்நூல் விலைக்கு வாங்கப்பட்டது. சுமார் 278 ரூபாய் பெறுமான கதர் துணியும், சுமார் 66 ரூபாய் பெறுமான சர்க்காக்களும் விற்கப்பட்டன. சமுதாய நலத்திட்டத்தின் கீழ், மொத்தம் 9,220 ரூபாய் கடனுக மக்களுக்கு வழங்கப்பட்டது.

பாபநாசம் (வடக்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூன் மாதத்தில், 104 மணங்கு பொறுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டன. கனிதரும் மரக்கன்றுகள் 113-ம், இதர மரக்கன்றுகள் 145-ம் நடப்பட்டன. குடி நீர் கிணறு ஒன்று புதுப்பிக்கப்பட்டது. 2 பர்லாங்கு நீளத்துக்கு சாதாரண பாதை ஒன்று புதிதாக அமைக்கப்பட்டது. குழாய் புதிப்பிக்கப்பட்டுள்ள புது நடைபாதை பாலம் ஒன்று அமைக்கப்பட்டது. கணபதி அக்ரஹாரத்தில், பால் வழங்கு சங்கம் ஒன்று திறக்கப்பட்டது. கிராம வீடுகட்டும் திட்டத்தின்கீழ் 16 வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டன. 5 சர்க்காக்கள் விநியோகிக்கப்பட்டன. சுமார் 130 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டு, 13 பவுண்டு பஞ்சு விநியோகிக்கப்பட்டது. 244 சிட்டம் கதர் நூல் சேகரிக்கப் பட்டது.

கதம்பைக் கயிறு வடிமுனை

(ஸ்ரீ பி. எம். லக்ஷ்மிபதி முதலியார், பி.எ. எம். எ., எம். ஆர். ஏ. எஸ். எ.)

[வடிமுனை குழாய் கிணறுகளுக்குத் தேவைப்படும் வடிமுனைகளை, குறைந்த செலவில், மேலும் சீர் திருந்திய வகையில் தயாரிப்பதுபற்றி இங்கு விவரிக்கப்படுகிறது. கதம்பைக்கயிறு சுற்றிய வடிமுனை களை உபயோகித்தால், வடிப்பான் வழியாக சிறுநொய் மணல்கூட குழாய்க்குள் செல்லாது. வடி முனைக்குள் புகும் நீரின் அளவும் அதிகம். மின்சார—ரசாயன செயல்களால், இக்கதம்பைக் கயிறு வடிமுனை பாதிக்கப்படுவதில்லை.

—ஆசிரியர்]

"பில்டர் பாயிண்டுகள்" அல்லது "வடிமுனைகள்" என்பவை பூமிக்குள் செலுத்தப்படும் முனைகளாகும். முனைகள் முழுமையும் உலோகத்தினுல் பலவிதமாகச் செய்யப்படும். அந்த முனைகளின் அமைப்பை, நீர் ஊற்றுள்ள அடுக்குகளின் அமைப்புக்குத் தகுந்தபடி தேர்ந்தெடுத்து செய்து கொள்ளலாம். பூமிக்குள் செல்லும் இந்த முனையில் 60 கண் சல்லடைக்கவசம் சாதாரணமாய் உபயோகிக்கப்படுகிறது. தற்போது பொதுவாகச் சிபாரிசு செய்யப்படும் வகைப் பில்டர் பாயிண்டு, சுமார் ஆறடி நீளமும் மூன்று அல்லது நான்கு அங்குலக் குறுக்களவுமுள்ள துத்தநாகக் குழாயால் ஆகியது. அந்தக் குழாயின் மேற் பரப்பில் ஒன்று அல்லது ஒன்றரை யங்குலத்துக்கு ஒன்ருகத் துளைத்த அரையங்குல வட்டத் துவாரங்கள் வளைந்தும் நெளிந்தும் தோன்றும். இந்த மாதிரியான துளைகள் ஓரளவுக்குட்பட்ட எண்ணிக்கையும் பருமனும் உடையவை. அந்த ஆறடிக் குழாயைச் சுற்றிலும் மேற் புறத்திலே 60 கண் சல்லடைக் கவசம் போர்த்தப்பட்டிருக்கும். இந்தக் கவசம் செம்புத்தகடு அல்லது பித்தளைத் தகடு அல்லது துத்தநாகத் தகடால் ஆனது. இந்தச் சல்லடைக் கவசத்துக்கு மேலே ஒட்டறைபோல் சுற்றிலும் மற்றெரு சல்லடைக் கவசமும் போடப்பட்டிருக்கும். இந்தக் கவசமும் துத்தநாகத் தகடு அல்லது பித்தளைத் தகட்டைத் துளையிட்டுச் செய்ததே யாகும். குழாயின் தலைப்புப் பக்கத்திலும் அடிப்பக்கத்திலும் இந்த இரண்டு கவசங்களையும் ஒன்ருகச் சேர்த்து நன்ருகப் பற்றவைத்து ஒட்டியோ அல்லது இணைத்தோ வைக்கப்படும். அதனுல் வடிமுனையைப் பூமிக்குள் அடித்திறக்கும் போது இந்த இரண்டு சல்லடைக் கவசங்களும் தனித்தனியாகப் பிரியாதிருக்கும். பூமிக்குள் செல்லும் முனையைவிடச் சற்றுப்பருத்த துத்தநாகக் கெட்டிகூர்முளை யொன்று வடிமுனையின் அடிப்பக்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கும். வடிமுனையை அடிக்கும் போது இந்த முளைதான் பூமியைக் கிழித்துத் துளைத்துக் கொண்டு கீழிறங்கி வடிமுனை கீழிறங்க வழிசெய்யும். வடிமுனையின் தலைப்பில் அதற்குப் பொருத்தமான குறுக்களவுடைய "கப்ளிங்" ஒன்று திருகிப் பொருத்தப்பட்டிருக்கும். நான்கு அங்குலப் பருமனுள்ள ஒரு உலோக வடிமுனையின் விலை சுமார் ரூ. 120 லிருந்து ரூ. 130 வரையிருக்கும்.

1. சேலம் ஜில்லா, ஆத்தூர் வட்டாரத்தில் இருக்கும் காட்டுக்கோட்டை என்ற கிராமத்தில் ஆத்தூர் வட்டார தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிறுவர்கள் பூங்கா ஒன்றை 1956-ம் ஞு மார்ச்சு 8ந்-தேதி சேலம் ஜில்லா கலெக்டர் ஸ்ரீR. பாலசுப்ரமணியம், I.A.S. அவர்கள் திறந்துவைத்தபோது எடுக்கப்பட்ட படம். படத்தின் நடுவிலிருப்பவர்தான் சேலம் ஜில்லா கலெக்டர் திரு R. பாலசுப்ரமணியம் அவர்கள்.

பூமிக்குள் நுழையும் இந்த முனையுடன் சேர்த்துப் பொருந்திய துத்தநாகக் குழாய்களைப் பூமிக்குள் வேண்டிய ஆழம்வரை அடித்துப்படிப்படியாக இறக்கி அடியில் நீர் ஊற்றுள்ள பெருமணல் சட்டுவரையில் செலுத்தி தண்ணீர் இறைப்பதற்குத் தோதாகச் செய்யப்படும்.

புதுமுறை வடிமுனை

பூமிக்குள்ளிருக்கும் ஊற்று நீரை இறைத்தெடுக்கும் குழாய்க் கிணறுகளில் குடியானவர்கள் பொதுவாகப் பழக்கத்திலிருந்து வரும் தினுசு வடிமுனைகளையே உபயோகிக்கிருர்கள். சிறு சிறு கண்களுடைய உலோகச் சல்லடைக் கவசம் போர்த்த வடிமுனைகளில் பெருமணல் தூசு, ஒட்டுகிற மண்தூள்கள் முதலிவையுள்ள அடுக்குகளில் இந்த முனைகளை இறக்கினுல் அவற்றில் அவ்வளவாக நீர் ஊறுவதில்லை. அதனுல் குழாய்க் கிணறு உபயோக

மற்றுவிடும். பெருமணல் அடுக்குகளில் வடிமுனைக் கண்கள் அடைபடுவதில்லை. ஆதலால் அந்த இடங்களில் மட்டும் நீர் தாராளமாக ஊறும். ஆனால் நொய்மணல் அடுக்குகளில் நீருடன் சேர்ந்துவரும் நொய் மணல் சல்லடைக்கண்களை அடைத்து விடுவதால் நீர் சரிவர ஊறாமல் தடைபடும். இந்த நிலையில்வடிமுனையை அடிக்கடி மேலும் கீழும் ஆட்டி கண்களைச் சுத்தம் செய்யவேண்டியது அவசியமாகும். இந்த முறையைச் சாதாரணமாய் விவசாயிகள் கையாள முடியாது. செலவு பிடிப்பதுடன் கஷ்டமும் வாய்ந்த முறை. கையாளுவதற்கு தொழில் நுட்பத்திறமையும் வேண்டும். சாதாரண விவசாயி இம்மாதிரி தொழில் நுட்ப முறையை அனுசரிக்க முடியாது. உலோக வடிமுனைகளிலிருக்கும் இவ்வகைக் குறைபாடுகளை நீக்கி இன்னும் குறைந்த செலவில் எவ்வித மணல் அடுக்குகளிலும் துவாரம் அடைபடாமல் உபயோகமாகக் கூடிய புதுமுறை வடிமுனையைக் கண்டு பிடிக்கும் பொருட்டு விவசாய இலாக்கா ஆராய்ந்து வந்தது. அதன் பயனாக துத்தநாகச் சல்லடைத் தகடுகளுக்குப் பதிலாக இரும்புத் தப்பைகளையும் கதம்பைக் கயறுகளையும் உபயோகித்துக் குறைந்த செலவில் திறம்பட வேலை செய்யக்கூடிய புது மோஸ்தரான வடிமுனைகளைத் தயாரிக்கும் பணியில் விவசாய இலாக்கா ஈடுபட்டது. இந்தியாவில் இதர இடங்களில் நடைபெறும் இதுபோன்ற முயற்சியும் சென்னை விவசாய இலாகாவில் நடைபெற்ற ஆராய்ச்சியும் தனித்தனியானவை.

கதம்பைக் கயிறு வடிமுனை தயாரிப்பு

கதம்பைக்கயிறு வடிமுனை உருளை வடிவமாயமைந்திருக்கும். ஓரங்குல அகலமுள்ள பட்டைகளை வட்ட வடிவமாக வளைத்துப் பற்ற வைத்திருக்கும். இந்த வட்டத்தின் குறுக்களவு மூன்றங்குலமிருக்கும். இந்தமாதிரி வளையங்கள் மூன்றங்குல வடிமுனையில் ஆறு இருப்பது சகஜம். அந்த வளையங்களின் மேற்புறத்தில் ஆறடி நீளமும் $\frac{1}{8}'' + \frac{5}{8}''$ அளவுகளுமுடைய ஆறு இரும்புத் தப்பைகளைச் சம தூரத்தில்வைத்துப் • பற்றவைத்தோ, இணைத்தோ பொருத்தியிருக்கும். இந்த மாதிரி வளையங்களை ஒன்றல்லது ஒன்றரை அடிக் கொன்றாக வைத்து வடிமுனை உருளைவடிவமாயமையும்படி செய்யப்படும். இரும்புத்தப்பைகளை வளையங்களுடன் சேர்த்துப் பிணைப்பதற்கு $\frac{1}{8}''$ இரும்பு ஆணியைத் தறைத்துச் சடிந்து விடப்படும். கயறு வடிமுனையின் அடிப்பக்கத்தில் கூர்மையான மரமுளை கெட்டியாய்ப் பிணைக்கப்பட்டிருக்கும். அதன் கூர்மையான முனை கீழ்நோக்கியமைந்திருக்கும். தலைப்பிலிருக்கும் வளையத்துக்குமேலே வடிமுனையின் தலைப்புப்பக்கத்தில் மூன்றங்குல “ கப்ளிங் ” ஒன்று கெட்டியாகத் திருகிச் சொருகப்பட்டிருக்கும். பெருமணல் அடுக்குள்ள பூமிகளில் இருபிரி முருக்கேற்றிய கதம்பைக் கயிற்றால் வடிமுனையின்மேல் ஒரு தடவை சுற்றினாலே போதும். நொய்மணல் அடுக்குள்ள இடங்களில் கயிற்றை இருமுறை ஒன்றன் மேலொன்றாகச் சுற்ற வேண்டும். அப்போதுதான் நொய் மணல் குழாய்க்குள் புகாமல் வெளியே தங்கிவிடும். சாதாரணமாய் வடிமுனையின் மேல் சுற்றுவதற்கு உபயோகப்படும் கதம்பைக்கயிறு மூன்று வீசம்முதல் அரைக்கால் அங்குலம் பருமனுடையதாயிருக்கலாம். வடிமுனையின் பருமனுக்கும் வடிமுனைக்குக் கீழிருக்கும் அடுக்கின் தன்மைக்கும் ஏற்றதைப் போலக்கயிற்றின் பருமனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

கதம்பைக்கயிறு வடிமுனைக் குழாய் இறக்கும் முறை

உலோக வடிமுனைக்குழாய்க் கிணறுகளை இறக்குவதைப் போலவே கதம்பைக்கயிறு வடிமுனைக் குழாய்க்கிணறுகளையும் இறக்கவேண்டும். இந்த முறையில் தமரூசியால் வெளிக் கவசக்குழாய் ஒன்று முதலில் குழிக்குள் இறக்கப்படும். பிறகு அந்தக் குழாய்க் கவசத்தின் வழியாகக் கயிறு வடிமுனையும் அதனுடன் சேர்ந்து இணைத்துள்ள குழாய்களும் பூமிக்குள் இறக்கிவிடப்படும்.

கதம்பைக்கயிறு வடிமுனைக் குழாய்களைச் சம்மட்டியால் அடித்தும், அல்லது திருகி விட்டும் பூமிக்குள் இறக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் வடிமுனை மேல் சுற்றியுள்ள கதம்பைக் கயிறு பழுதடைந்துவிடும். கதம்பைக் கயிறு வடிமுனைக் குழாய் பூமிக்குள் நீர் ஊற்றுள்ள அடுக்குக்குள் புதையும்படி இறங்கியதும் வடிமுனைக்கு வெளியே சுற்றியுள்ள கவசக் குழாயை பூமிக்கு மேலே இழுத்து எடுத்து விடவேண்டும். வடிமுனைக் குழாய்க்கும் கவசக் குழாய் எடுத்ததால் ஏற்பட்ட குழியின் துவாரத்துக்கும் இடைப்பட்ட சந்தில் பெருமணலைக்கொட்டி நிரப்பிக் கெட்டிப்படுத்தவேண்டும். அதனால் கயிற்றைச் சுற்றிலும் பருமணல் தூள் நிறைந்து குழாய்க்குள் நொய்மணல் தூசு துப்பு முதலியவை சேர்ந்து கயிற்றின் ஓட்டைகளை அடைக்காமல் தடுக்கும்.

வடிமுனை தயாரிப்புச் செலவு

உலோக வடிமுனையைவிட கதம்பைக்கயிறு வடிமுனை செய்யச் செலவு குறையும். மூன்றங்குல கயிற்று வடிமுனை செய்ய ரூ. 18-லிருந்து ரூ. 20 வரை செலவாகும்.

இந்த மோஸ்தர் வடிமுனைகளை அதிக அளவில் உண்டாக்கினால் அதன் விலை இன்னும் குறையும்.

கதம்பைக் கயிறு வடிமுனையுடன் இணைத்த குழாய்களையும் உலோக வடிமுனையுடன் தயாரித்த குழாய்களையும் ஒரே ஊற்றுக் குழிகளில் இறக்கி நீர் இறைத்துப் பரிசோதிக்கப் பட்டது. கதம்பைக் கயிறு சுற்றிய வடிமுனைக் குழாய்கள் மூலம் மற்றதைவிடச் சுமார் 40 முதல் 20 சதம் வரை அதிகமாய் நீர் சுரந்துள்ளது. கயிறு சுற்றிய வடிமுனைகளில் துவாரங்கள் அதிகமிருப்பதாலேயே வடிமுனைக்குள் அதிக அளவு நீர் உட்புகமுடிகிறது.

இதர ஆராய்ச்சிகள்

பஞ்சாப் தேச மராமத்து இலாகா நீர்ப்பாசன ஆராய்ச்சி டைரக்டரான டாக்டர் மெக்கன்சி டெய்லர் செய்த பரிசோதனைகளால் தெளிவாகிய விஷயங்கள் பின் வருமாறு.—

(1) எப்போதும் நீரில் மூழ்கியிருக்கும் வடிமுனைக் குழாய்க்கு கதம்பைக் கயிறு உபயோகித்துப் பார்த்ததில் வடிப்பான் பழுதடையாமலிருந்தது.

(2) குடிப்பதற்கும், பயிரிடுவதற்கும் தகுதியாகும் அளவு உப்புள்ள நீரிலும் அல்லது சர்வசாதாரணமாக நாம் பழக்கத்தில் பார்த்து வரும் சொற்ப அளவுள்ள உப்பு நீரிலும் கயிறு மூழ்கியிருந்தாலும் அது அவ்வளவு சீக்கிரத்தில் பழுதடைவதில்லை.

(3) க்ஷார உப்போ அல்லது கார்ப்போ கலந்த நீரில் முழுகியிருந்தாலும்கூட கதம்பைக் கயிறு அதிகம் கெடுவதில்லை.

(4) பூமி அடுக்குகளில் காணப்படும் எந்த நிலையிலும் குழாய்க் கிணற்றுக்கு வடிப்பானுக உபயோகிக்கப்படும் கதம்பை நார் பழுதடைவதில்லை.

(5) வடி முனைக்குக் கதம்பை நார்க் கயிறு சுற்றுவதால் வடிமுனைக்குள் நீர் தொடர்ந்து சுரந்து செல்லும் வாய்ப்பு அதிகமாகிறது.

(6) கதம்பைக்கயிறு உபயோகிக்கும் வடிமுனையில் நீர் புகும் பரப்பு அதிகமாகவும், உலோகச் சல்லடை சுற்றிய வடிமுனையின் கண்கள் அடைபடுவதைப் போல கதம்பைக் கயிறு முனையின் துவாரங்கள் அடைபடாமலும் இருப்பதால் கதம்பை நார் வடிமுனைக்குச் சிறந்ததாகும்.

இதர இடங்களில் கதம்பைக் கயிறு சுற்றிய வடிமுனைகளை இறக்கி ஆராய்ந்து கண்ட முடிவுகளைக் கீழே காணலாம்.

கதம்பைக் கயிறு வடி முனையில் துவாரங்கள் அதிகம். அதனுல் வடிமுனைக்குள் புகும் நீரின் அளவும் அதிகமாகிறது. கயிற்று வடிப்பான் வழியாகச் சிறு நொய் மணல் கூட குழாய்க்குள் செல்லாது. உலோக முனைகளைப் போல கதம்பைக்கயிறு முனைகள் மின்சார-ரசாயனச் செய்கைகளால் பாதிக்கப்படுவதில்லை.

உலோகச் சல்லடைகளின் மேற்பரப்பில் சுண்ணும்பு படிவதைப்போல் கயிற்றுமுனை மேற்பரப்பில் படிவதில்லை. இந்த முனையில் நீர் சுரந்து புகுவது அதிகமிருப்பதால் மற்ற பொருள்கள் வடிமுனையைச் சூழ்ந்து வருவதற்கு ஏதுவில்லை. பூமியின் கீழ் ஊற்றில் நெடுங்காலம் கதம்பைக் கயிறு மூழ்கியிருந்தாலும் அது கெடுவதில்லை. நான்கு ஆண்டுகள் தொடர்ந்து முழுகியிருந்தாலும் கூட கயிறு சேதமடையவில்லை.

மிகக் குறைந்த செலவிலேயே இந்த வடிமுனையைத் தயாரிக்கலாம். தயாரிப்புச் செலவு குறைவதே இந்த முனையின் முக்கிய அம்சமாகும். சாதாரணமாக நான்கு அங்குலக் கயிறு வடிமுனை செய்வதற்குச் சுமாராக ரூ. 25 தான் செலவு பிடிக்கும். அந்த மாதிரி உலோக முனை தயாரிக்கச் சுமார் ரூ. 120 முதல் ரூ.150 வரை செலவாகும்

[அகில இந்திய ரேடியோ மூலம் ஒலிபரப்பப்பட்ட பேச்சு.]

2. சேலம் ஜில்லா ஆத்தூர் வட்டாரத்தில் இருக்கும் காட்டுக்கோட்டை என்ற கிராமத்திற்கு ஆத்தூர் வட்டார தேசிய வளர்சித் திட்டத்தின்கீழ் காங்கேயம் பொலிக்காளை ஒன்று கொடுக்கப்பட்டது, பொலிக்காளையைப் பிடித்துக்கொண்டு நிற்பவர்தான் காட்டுக்கோட்டை பஞ்சாயத்து போர்டு தலைவி ஸ்ரீமதி R. A. லோகாம்பாள்.

முக்கிய அறிவிப்பு

காந்தி ஜெயந்தி மலராக, 1956, அக்டோபரில் வெளிவரும் "கிராம நலம்" சுமார் 120 பக்கங்கள் கொண்டதாக இருக்கும். கவர்ச்சி மிக்க பல படங்கள், சிந்தனையைக் கவரும் சிறந்த கட்டுரைகள், கதைகள், பாடல்கள், முதலியன அம் மலரில் பிரசுரிக்கப் படும்.

இம் மலரின் விலை எட்டணு. சந்தாதாரர்கள், இம் மலரைப் பெறக் கூடுதலாக பணம் அனுப்ப வேண்டியதில்லை.

"கிராம நல" ஏஜெண்டுகள், தங்களுக்குத் தேவைப்படும் விசேஷ மலர் பிரதிகளின் எண்ணிக்கையை முன்கூட்டியே, கீழ்க்கண்ட முகவரிக்குத் தெரிவிக்கக் கோருகிறோம் :—

ஆசிரியர்,
"கிராம நலம்"
சென்னை-9.

ஐந்தாண்டுத் திட்டம்

ஸ்ரீ என். ராகவன்

மறுமலர்ச்சி உதயம்

ஊரெல்லாம் மறுமலர்ச்சி
உதயமாகுது—மக்கள்
உள்ளமெல்லாம் ஆனந்தம்
உருவாகுது—நம் (ஊரெல்)

நீர்வளமும் நிலவளமும் நிறைவாகுது
நித்த நித்தம் உற்பத்தியும் விருத்தியாகுது
தார் ரோடும் லேட்டும் கூடப் போடப்படுகுது
சாலைகளும் பாலங்களும் கூடி வருகுது (ஊரெல்)

ஆதாரப் பள்ளிக்கூடம் முதியோர் கல்வி
அடிப்படைக் கல்விக் கூடம் அதிகரிக்குது
மாதர் நல சங்கங்களும் வாசகசாலை
வடிமுனைக் கிணறுகளும் குளிப்பறையுமாய் (ஊரெல்)

நோய் நொடியைக் குணப்படுத்தும் வைத்யசாலையும்
நூறுவகைக் குடிசைத்தொழில் நுண்கலைகளும்
தாய் சேய் நல விடுதிகளும் ரேடியோக்களும்
ஜனங்களுக்குப் பொழுதுபோக்கு நிலையங்களுமாய் (ஊரெல்)

தேசிய வளர்ச்சி திட்டத்தினுலும்
க்ஷேம சமுதாய நலத்திட்டத்தினுலும்
ஆசியாவின் ஜோதியென அவனியோர் போற்ற
அதிவிரைவாய் முன்னேற்றம் அடைந்து வருகிற (ஊரெல்)

அப்பளக் குடிசைத்தொழில்

அப்பளத்தொழிலுக்கு
அடிக்குது யோகம்
அமெரிக்காவில் கூட
கிராக்கி அநேகம் (அப்)

குப்பிப் பாட்டியின் குடிசைத்தொழிலிது
கூரை மோட்டிலே கொடி கட்டிப் பறக்குது
உப்பிப் பொரித்த உளுந்தமா அப்பளம்
உண்ண உண்ணத் திகட்டாத பட்சணம் (அப்)

பொழுது போக்குக்குப் பொன்னுன தொழிலிது
பொருள் வருவாய்க்குப் போதிய தொழிலிது
பிழைக்க வகையற்ற பெண்களை யெல்லாம்
பேணிக்காக்கும் பெருமையுடையது (அப்)

அப்பள உற்பத்தி ஸ்தாபன மொன்றை
ஆரம்பித்து அபிவிருத்தி செய்ய
ஒப்பிய இந்திய சர்க்கார் கடனும்
உதவி, காக்க முன் வந்திருக்கிற (அப்)

குடிசைத்தொழிலும் யந்திரத்தொழிலும்

குடிசைத் தொழிலும் யந்திரத் தொழிலும்
கூடி வளர்ந்தால் நாடு முன்னேறும் (குடி)

படியளக்கும் வயல் குடியானவர்க்குப்
பக்க வரும்படி குடிசைத்தொழிலே
நடுத்தர வகுப்பு நகர மக்களுக்கு
நாடியானது யந்திரத்தொழிலே (குடி)

கிராம முன்னேற்றத்துக்குக் கைத்தொழில் அவசியம்
நகர முன்னேற்றத்துக்கு விசைத்தொழில்அவசியம்
சேம நலங் கொழிக்கும் தேச முன்னேற்றத்துக்குத்
தேவை யிரண்டுமென்று யாவரும் போற்றவே (குடி)

மிதமான ஜனத்தொகை மேனுட்டு ஆக்க
வேலைகளுக்கு விசைத்தொழில் அவசியம்
அதிக ஜனத்தொகை அடங்கிய நாட்டில்
ஆக்க வேலைக்கு அடிப்படை கைத்தொழில் (குடி)

கைத்தொழில்களையும் யந்திரத்தொழிலையும்
கண்ணிரண்டெனவே காத்திடும் சர்க்கார்
செய்வகையெல்லாம் தேர்ந்து ஐந்தாண்டுத்
திட்டங்கள் மூலம் வெற்றியடைந்திடும் (குடி)

சிறு பாசனத் திட்டங்கள்

சிறு சிறு பாசனத் திட்டங்களே
தேசச் செழிப்புக்கு ஜீவ நாடி (சிறு)

இறவைக் கேணிகள் ஏரிகுளம்
இலவசமாய்க் குழாய்க் கிணறுகளும்
நிறையக் கோடிப் பணச் செலவில்
நீர்வளம் பெருக்கும் சர்க்காரின் (சிறு)

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே
மூணு லட்சம் டன் தானியம்
அதிகமாகப் பெருக்கிடவே
ஐயாயிரம் குழாய் அமைத்திட்ட (சிறு)

இருபத்து நாலு கோடி ரூபாயில்
இன்னும் நாலாயிரம் குழாய்கள்
இரண்டு லட்சம் டன் பெருக்க
இரண்டாம் திட்டத்தில் இடமளிக்கும் (சிறு)

நாலு மாச காலமாச்சு
நாட்டில் முன்போர் குழாய் அமைக்க
நாளொன்றுக்கோர் குழாய் வைக்கும்
நவீன் வசதிக்கால மின்றே (சிறு)

தன்னலம் கருதாத் தனிப்பெரும் சேவை

(ஸ்ரீ குழந்தை வேலு, பல்லடம்.)

[கார் நிலையத்தில் காலை முதல் மாலைவரை பயணச் சீட்டுக்கிடைக்காமல் காத்திருந்து அவதியுற்று அலுத்துப் போன ஓர் கிராமவாசி தன் தன்னலமற்ற சேவையை எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதை இக் கட்டுரையாளர் எடுத்துக் காட்டுகிறார்.

ஆசிரியர்]

பொள்ளாச்சிக்கும் கோயமுத்தூருக்கும் அநேகமாக மணிக்கொரு கார் உண்டு. தினசரி ஓரிரண்டு ரயிலும் உண்டு. கார் நிலையத்துக்கும் ரயில் நிலையத்துக்கும் சுமார் 3/4 மைலிருக்கும். அது கல்யாண மாத மானதால் ஏராளமான கூட்டம். கூட்டம் குறையக் குறைய வந்து நிறைந்து கொண்டேயிருந்தது.

அன்று நான் எனது நண்பர் ஸ்ரீ சோமு என்பவருடன், கோயமுத்தூர் போக, பொள்ளாச்சி கார் நிலையத்துக்கு வந்து சேர்ந்தேன். கூட்டத்தைக் கண்ட நாங்கள் மலைத் தேபோய் விட்டோம். காலை 6–30 மணியிலிருந்து பிரதி காருக்கும் முயன்றோம். எங்களோடு ஒரு கிராமவாசியும் தம்மாலானவரை முயன்றார். எங்களுக்கே (through) டிக்கெட் கிடையாத போது பாவம் இவருக்கு எங்கே டிக்கெட் கிடைக்கப்போகிறது ! ஒவ்வொரு பஸ்ஸுக்கும் சீட்டுப் பெறத் தவறிய போதெல்லாம் நாங்கள் மூவரும் ரயிலுக்குப் போவதைப்பற்றிப் பேசிக் கொள்வது, ரயில் புறப்படும் நேரத்தை விசாரித்துக் கொள்வது, "அடுத்த பஸ்ஸுக்கு டிக்கெட் கிடையாதவரை நிச்சயம் 12·45-க்குப் புறப்படும் ரயிலுக்குத்தான் போவது, இந்த டிக்கெட் பெறும் பகீரதப் பிரயத்தனத்தில் இனி ஈடுபடுவதில்லை" என்று நாங்கள் மூவருமே பேசி முடிவு கட்டிக் கொள்வது, மீண்டும் "இந்த ஒரு வண்டிக்குமட்டும் ஒரு கடைசி முயற்சி செய்து பார்த்து விடுவோமே" என்று முயல்வது. இப்படியே நாங்கள் மனம் சலித்துப் போய்விட்டோம். 12–30 மணிக்குப் புறப்படும் காருக்கும் டிக்கெட் கிடைக்கவில்லையென்று தெரிந்தவுடனே நாங்கள் கார் நிலைய 'புக்கிங் ஆபீஸ்,' ஐ முற்றுகையிடும் முயற்சியில் ஈடுபடுவதை நிறுத்தி விட்டு, ரயிலுக்கே புறப்பட்டு விடுவதென முடிவு கட்டிவிட்டோம்.

12–30 மணிக்குப் புறப்படும் காருக்கும் டிக்கெட் கொடுத்து முடிந்து வண்டி புறப்பட விருக்கிறது. ஜனங்களும் ஏறி உட்கார்ந்தாய்விட்டது. அது கரிவண்டி. கண்டக்டர் கரி போட்டு நெருப்பிட்டு 'டிர்ர்,' 'டிர்ர்,' 'டிர்ர்,' என்று சுத்த ஆரம்பித்தார், நானும் நண்பர் ஸ்ரீ சோமுவும் அக் கிராமவாசியை ரயிலுக்குப் போகலாமென்றழைக்கும் போது கிட்டத்தட்ட மணி 12–30. ஆனால் அவரோ அந்தக் காரையே பார்த்துக் கொண்டு இருந்தார். "கண்டக்டர் தயவிலாவது ஒரு டிக்கெட் பெற முடியுமா என்று பார்க்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே கண்டக்டரிடம் சென்று கேட்டார். ஏற்கெனவே மூன்று முறை அவருக்கு டிக்கெட் இல்லையென மறுத்த கண்டக்டர் அம்முறையும் இல்லையென்று கூறிவிட்டு காரிலேறி 'ரைட்' கொடுத்தார். டிரைவர் வண்டியை எடுக்க முயன்றார். ஆனால், வண்டி நகரவில்லை. கண்டக்டரும் பிரயாணிகளில் சிலரும் உடனே வண்டியை விட்டு இறங்கித் தள்ள ஆரம்பித்தனர்.

"இனியும் 15 நிமிஷங்கள் தானிருக்கின்றன. ஓடினால் தான் ரயில் கிடைக்கும். இன்னும் இரண்டொரு நிமிஷம் தாமதித்தால் ஓடினால் கூட ரயில் தவறிவிடும்" என்று நான் சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்டு "ஆமாம், ஆமாம் உடனே புறப்படவேண்டும்" என்று சொல்லிக் கொண்டேயிருந்த அக்கிராம வாசி, திடீரென உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களையப் புறப் பட்டுவிட்டார்.

அவர் தலையில் முண்டாசு, அதன் மேல் ஒரு சாக்கு மூட்டை, கழுத்தில் இருபக்கங்களிலும் தொங்க ஒரு மேல் துண்டு இடது கக்கத்திலே வெள்ளைத் துணிக் கவர் போட்ட ஒரு குடை, வலது கையிலே நிறைய சாமான்கள் கொண்ட ஒரு பெரிய கைப்பை. கால்களில் பாதரட்சை. இது தான் அவர் ரயிலுக்குப் புறப்பட்ட காட்சி. இதோடு திடீரென காரைத்தள்ளிக்கொண்டிருக்கும் கூட்டத்தின் மத்தியில் பாய்ந்து இடது காலைப் பின்னுக்கு நீட்டிப் பலமாகப்பூமியில் விரல்களைப் ஊன்றி, வலது காலைச் சற்று முன்னால் வளைத்து வைத்துப் பூமியில் ஊன்றி, பை மூட்டையை மெல்ல வலது மணிக்கட்டுக்கு நகர்த்தி விட்டு இருகரங்களையும் சேர்த்துக் காரின் பின் பாகத்தில் வைத்தழுத்தி, மூட்டையோடும் முண்டாசோடும் கூடிய தலையால் அந்த மோட்டாருக்குக் கொடுத்த 'புஷ்' (push) இருக்கிறதே அது கண் கொள்ளாக் காட்சியாயிருந்தது எங்களுக்கு ; எங்களுக்கு மட்டுமல்ல அங்கிருந்த பலருக்கு.

நான்குதடவையும் டிக்கெட் கொடுக்க மறுத்த அதே கண்டக்டர். அதே கார். மூட்டை முடிச்சுக்களை இறக்கி வைக்க வேண்டுமே, குடையை ஒருபக்கம் வைக்கவேண்டுமே, அங்க வஸ்திரத்தை இடுப்பிலே கட்டவேண்டும் அல்லது கழுத்திலே சுற்ற வேண்டுமே என்று எண்ணினாரா ? பாதரட்சைகள்

வழுக்க, குடை கீழே 30 டிகிரிக்கு நகர, தலையிலிருந்த மூட்டை கீழே குதிக்க முயல, மணிக்கட்டில் தொங்கிய பை மூட்டை சரிய, கழுத்திலிருந்த அங்க வஸ்திரம் கண்களை மறைக்க, இவ்வளவையும் பொருட்படுத்தாது அவர் கருமமே கண்ணாய் கடமையை ஆற்றிக்கொண்டிருந்தார்.

அம் மகானின் மகத்தான சேவையைக் கண்ட பின்னும் — பொது நல ஊழியர்களெனச் சொல்லப்படுகிற — எண்ணிக் கொண்டிருக்கிற —நாங்கள் எப்படிச் சும்மா பார்த்துக் கொண்டிருக்க இயலும் ? வெறும் கிரீச் சத்தமும் புகையும் வந்து கொண்டிருக்கும் அந்தக் காரை வேண்டா வெறுப்பாக — அவர் மீதுள்ள கோபத்தையும் அடக்கிக் கொண்டு — நாங்களும் 'புஷ்தான்' (Push Dan) கொடுத்தோம். கார் புறப்பட ஆரம்பித்தது. நாங்கள் விட்டு விட்டோம். அவர் விட்டாரா ? அவதி பொறுக்கமாட்டாமல் தலையிலிருந்த மூட்டை கீழே குதித்து விட்டது. கக்கத்திலிருந்த குடையும் 'இனிவிடு' என்று கோபித்துச் சொல்லுகிற மாதிரி காலில் விழுந்து குத்தியது. கழுத்திலிருந்த அங்க வஸ்திரமும் கழன்று விழுந்து காலில் சிக்கி இடைமறித்தது. "இனியாவது தள்ளுவதை நிறுத்தேன்" என்று சொல்லுகிற மாதிரி தலை முண்டாசு அவிழ்ந்து கண்களை மறைத்துக் கொண்டது.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பவரை எது தான் என்ன செய்யும். இமையளவேனும் இவைகளை அவர் சட்டை செய்தால்தானே! நல்ல வேளையாக, இவர் இன்னும் விழவில்லை. இவருக்காக இரக்கப்பட்டு இனியாவது விட்டு விடுவார் என்றெண்ணித் தானோ என்னவோ, கார் நிதானமாய் நகர்ந்து நகர்ந்து நின்றது. அவ்வப் போதெல்லாம் ஓடி ஓடித் தலையாலும் கைகளாலும் முட்டி முட்டித் தள்ளினார். மற்றவர்களும் கூடத் தள்ளுகிறார்களா வென்றாவது கவனித்தாரா ? கார் நிச்சயமாகவே நகர்ந்து செல்லுகிறதெனத் தெரிந்தவுடனேதான் காரைக் கைவிட்டார். நகர்ந்து சென்ற காரை நகையுடன் நோக்கி நின்றார். பின் கீழே அங்கு மிங்குமாய்க் கிடந்த தன் 'ஆஸ்தி'களைப் பொருக்கிச் சேர்க்கும் போது மணி 12-45.

"இனி ரயிலுமில்லை" என நாங்கள் சொன்னபோது "இல்லாவிட்டால் போகிறது போங்கள். என்ன செய்வது. இந்த பஸ் நகர இன்னேரமாய்விட்டது" என்றார். அதன் பின் மூன்று பஸ்களுக்கு முற்றுகையிட்டும் தவறிவிட்டோம். மானேஜர் சிபார்சு பிடித்து எப்படியோ இவருக்கும் சேர்த்து டிக்கெட் வாங்கிப் புறப்பட்டோம். அவர் வழியிலிறங்கியது எங்களுக்குத் தெரியாது, நாங்கள் அவர் விலாசத்தையும் கேட்டறியத் தவறி விட்டோம்.

கல்யாணக் கூட்டம் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருப்பதையும், கைவலுத்தவர் அடித்துப் பிடித்தும், செல்வாக்குப் படைத்தவர், உட்சென்றும் கூலி ஆட்கள் மூலமாகவும் டிக்கெட் வாங்கிக் கொண்டிருப்பதும், தாமதித்தால் ரயில் தவறி விடுமென்பதும், ரயில் தவறினால் லக்குவில் டிக்கெட் பெறமுடியா தென்பதும், செலவு அதிகரிக்கும் மென்பதும் அவரறியாததல்ல. நாங்கள் தான் மணிக்கணக்கில் அவைகளைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருந்திருக்கிறோமே, எனினும் கடமையின் முன் எல்லாம் காற்றுய்ப் பறந்து விட்டது பாருங்கள் !

இத்தகைய நிலை ஒவ்வொரு கிராம சேவையாளருக்கும் ஏற்பட்டுவிடின் சர்வோதய சமுதாயம் சடுதியிலமைக்கப் பட்டுவிடுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய மகான்கள் ஆங்காங்குள்ள கிராமங்களில் இன்னும் இல்லாமலில்லை. ஆனால் அவர்கள், ஆடம்பரம், ஆர்ப்பாட்டம் பெயர், புகழ் இவைகள் என்னவென்றும் அறியாதவர்கள். அறிந்தாலும் அவைகளை விரும்பாதவர்கள். ஆகையால் அவர்களிருக்குமிடம் யாருக்கும் தெரிவதுமில்லை.

போக்கு வரவில்லாத பெரிய மலையுச்சிகளில் தோப்புத் துறவுகளுண்டு. நல்ல, நறுமணமும் ருசியும் கமழும் பூக்களும் பழங்களும் அவைகளில் பூத்துக் காய்த்து மாய்ந்து அனுபவிப்பாரின்றி மண்ணில் சதா மடிந்து கொண்டு தானிருக்கின்றன. யாரோ அனுபவிப்பார் ! மறைந்து கிடக்கும் (இத்தகைய) மகாத்மாக்களைத் தேடிக் கண்டு பிடித்து அவர்களின் தன்னலமற்ற சேவையை வெளிப்படுத்த முன் வருமாறு பொது வாழ்வில் அக்கறை கொண்ட அனைவரையும் இதன் மூலம் வேண்டிக்கொள்ளுகிறேன்.

சீர்காழி வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, ஜூன் மாதத்தில், பெருமங்கலத்தில் ஒரு நடைபாதை பாலமும், அகர வட்டாரம் கிராமத்தில் இரு நடைபாதை பாலங்களும் கட்டி முடிக்கப் பட்டன. சுமார் 220 ரூபாய் பெறுமான கதர் விற்கப் பட்டது ; 15 சர்க்காக்களும் விற்கப்பட்டன, மாற்றுத் திட்டத்தின் கீழ், 53 சிட்டம் கதர் நூல் வாங்கப்பட்டது, 25 கால்நடைப் பிராணிகளுக்கு மருத்துவ சிகிச்சையும், 80 பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சையும் அளிக்கப் பட்டன.

வளத்தி வட்டாரத்தில்.

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மே மாதத்தில் 15 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டன. 128 பவுண்டு பொறுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டன. மேலும், 3 ஏக்கர் நிலத்தில் காய்கறித் தோட்ட சாகுபடி ஆரம்பிக்கப் பட்டதுடன், 20 ஏக்கர் நிலத்தில் பசுந்தாளுரச் செடிகள் பயிரிடப்பட்டன. பெருவலூரில் புது கக்கூசு கட்டப்பட்டது. இரு மக்கள் மனமகிழ் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வடவெட்டி கிராமத்தில், இரு நடைபாதை பாலங்கள் கட்டப் பட்டன. அபிவிருத்தி வேலைகளுக்காக மக்கள் தங்கள் பங்காக அளித்தது 675 ரூபாய். ரூ. 195-2-3 பெறுமான கதர் விற்கப்பட்டது.



(ஜூலை மாதத் தொடர்ச்சி.)

காட்சி 14.

இடம் : நல்லிடைக்குறிச்சியில் பூங்கா.

காலம் : மாலை மணி 4.

நடிகர்கள் : மூர்த்தி, சேகர், கந்தன்.

(மூர்த்தி பெஞ்சு ஒன்றில் உட்கார்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறான். சேகர் ஒரு காலை தரையிலும் மற்றொரு காலை பெஞ்சின்மேல் வைத்துக்கொண்டும் மூர்த்தி அருகில் நின்று கொண்டு பேசுகிறான்.)

சேகர்.—நான் கண்டது கனவுதான் என்றாலும் அலட்சியம் செய்யக்கூடாது மூர்த்தி! இனியும் நாம் காலங்கடத்தினால் ஹேமாவை மறந்துவிடவேண்டியதுதான்.

மூர்த்தி.—சேகர்! காத்திரு, காலம் வரும். காரியத்தை முடித்துவிடலாம். "ஞாலங்கருதினும் கைகூடும் கலங்காது காலங்கருதி இடத்தாற் செயின்"—வள்ளுவர் வாக்கு—பதட்டப்படாதே!

சேகர்.—மூர்த்தி! ஆறுதல் மொழி ஆருக்கு வேண்டும்? போருக்குச் செல்பவன் பொரியுருண்டைக்கா நிற்பான்?

மூர்த்தி.—சேகர்! நான் சும்மா இருக்கிறேனென நினைக்கின்றாய். அது தவறு. திட்டங்கள் தீட்டிக்கொண்டுதான் இருக்கிறேன். (கைக் கெடியாரத்தை பார்க்கிறான்.) அடடே! மணி 4½ இந்த லெட்டரை போஸ்ட் பண்ண வேண்டும். வா....போஸ்ட்டாபீஸ் வரையிலும் போய் விட்டுவரலாம்.

சேகர்.—அதோ கந்தன் வருகிறான். அவனும் போஸ்டாபீசுக்குத்தான் போகிறான். கையில் கவர்கூட வைத்திருக்கிறான்.

மூர்த்தி.—என்ன? கந்தன் கையில் கவர்! (சிறிது யோசனை செய்கிறான் பிறகு) சேகர்! அந்தக் கவரை எப்படியாவது நாம் சோதனை போடவேண்டும்.

சேகர்.—நமக்கு எம்பா! அந்த சென்சார் டியூட்டி?

மூர்த்தி.—மோகனுக்கும் ஹேமாவுக்கும் லெட்டர் கரஸ்பாண்டென்ஸ் நடந்து கொண்டிருக்கிறதாம், அதை நாம் கவனித்தாக வேண்டும்!

சேகர்.—ஆமாம்! கவனிக்கவேண்டிய காரியந்தான் மூர்த்தி! நாம் இங்கு நிற்பதைவிட ஒளிந்து கொள்வது நல்லது.

மூர்த்தி.—உண்மைதான். நம்மைப் பார்த்துவிட்டால் கந்தன் வேறு வழியாகப் போய்விடுவான்.

(இருவரும் ஒளிந்து கொள்கிறார்கள்.)

கந்தன்.—வருகிறான்.

கந்தன்.—என்ன உத்தியோகமடா இது? அரை நிமிஷம் அசந்து உட்கார முடியுதா? வேலைக்காரர்களெல்லாம் கடல் அலைகளாம்! ஐயா சொன்னாரு! கடல் அலை ஓய்ந்தது உண்டா? அதைப்போல இரவும் பகலும் இடைவிடாமல் வேலை செஞ்சிக்கிட்டேருக்கனுமாம் நான்! எப்படி வியாக்யானம்? மெஷின்கூட இடைவிடாமல் வேலைசெய்ய மாட்டேங்கிது, மக்கார் பண்ணுது. சரி—காத்து குளுகுளுன்னு அடிக்குது இந்த பூந்தோட்டத்திலே. ஹாய் அரை மணி நேரந்தான் தங்குவோமே, குடியா முழுகிப்போயிடும்?

(கந்தன் பெஞ்சியில் உட்காருகிறான், கவரை பெஞ்சியின் மேல் வைத்துவிட்டு பொடி மட்டையிலிருந்து ஒரு சிம்டா பொடியை எடுத்து உறிஞ்சுகிறான். விறு விறுப்போடு பாட்டு ஒன்றும் பாடுகிறான் அப்போது மூர்த்தி மறைவிலிருந்து கிளம்பி கந்தனுக்குத் தெரியாமல் மெதுவாக நடந்துவந்து கந்தன் உட்கார்ந்திருக்கிற பெஞ்சுக்கடியில் ஒளிந்து கொள்கிறான். கந்தன் தன்னை மறந்து பாடிக்கொண்டிருக்கும்போது மெதுவாக பெஞ்சியிலிருக்கிற கடிதத்தை எடுத்துக் கொண்டு தன் கையி

லிருக்கிற கடிதத்தை அங்கேவைத்து விடுகிறுன். கந்தன் பாட்டை முடித்துவிட்டு சுருட்டைப் பற்றவைத்து விட்டு வெற்றிலை பாக்கு பொட்டணத்தை எடுத்துப்பிரிக்கி றுன். மூர்த்தி கந்தனுக்கு பின்பு நின்றுகொண்டு இறுமுகிறுன். கந்தன் திரும்பிப் பார்க்கிறுன்.)

மூர்த்தி.—கந்தா எனக்குங் கொஞ்சம் வெத்திலே கொடேன்.

கந்தன்.—படுபாவி ! இங்கேயும் நீ வந்துட்டியா ?

(சேகர் மறைவிலிருந்து வந்துகொண்டே)

சேகர்.—என்ன ! படுபாவியா ?

கந்தன்.—ஐய்யய்யோ ! ரெண்டு பேருமே இருக்கீங்களா ? (பெஞ்சுமேலிருந்த கடிதம் வெற்றிலைப்பாக்கு பொட்ட ணம் எல்லாவற்றையும் சுருட்டி எடுத்துக்கொண்டு கந்தன் ஓட்டம் பிடிக்கிறுன். பிறகு மூர்த்தி பெஞ்சில் உட்காருகிறுன் சேகர் மூர்த்திக்குப் பின்புறமாக நின்று கொள்ளுகிறுன்.)

சேகர்.—அபாரமான மூளையப்பா உனக்கு !

மூர்த்தி.—பின்னே !

சேகர்.—சரி from address என்னப்பா ?

மூர்த்தி.—From address சா ஹேமா M.B.B.S., Lady Doctor. யாருக்கு எழுதியிருக்குத் தெரியுமா ? சாக்ஷாத் மோகனுக்குத்தான்.

சேகர்.—உன் plan (பிளான்) சரிதான்.

(மூர்த்தி அதற்குள்ளாக கவரைப் பிரித்து கடிதத்தை எடுத்துப்படிக்கிறுன்.)

மூர்த்தி.—சேகர் ! கேளப்பா கேள் ! உன் இதய ராணி ! எழிலரசி ! இன்பப் பூங்கா ! இன்னெருவனுக்கு எழுதி யிருக்கும் பொன்னேலையைப்பார் ! (சேகரின் முகம் கருக்கின்றது, விகாரமடைகின்றது , வேதனையுறுகின்றது. மூர்த்தி படிக்கிறுன்.)

பண்புமிக்க நண்ப !

அன்பு கலந்த எனது வணக்கங்கள். எங்கள் இல்லத் திலே எல்லோரும் நலம் ; உங்கள் நலத்தை ஒவ்வொரு நாளுங்காண ஆவல்.

சேகர்.—நலத்தைக்காண ஆவல் ! இருக்கும் ! என் இருக் காது ?

(மூர்த்தி படிக்கிறுன்.)

" இக்கடிதம் வெள்ளி விழாக் கடிதம் என்பது உங்க ளுக்கு தெரிந்திருக்கு மென்று நம்புகிறேன் ..... "

சேகர்.—அதென்னப்பா வெள்ளிவிழாக் கடிதம் ?

மூர்த்தி.— ....ம்.. இது இருபத்தைந்தாவது கடித மாம் !

சேகர்.—என்ன ? இருபத்தினுலு கடிதம் எழுதியிருக் காளா இதற்கு முன்பு ?

மூர்த்தி.—ஆமாம் ! ஹேமா—மோகன் கடிதப் போக்கு வரத்து நெடிது வளர்ந்திருக்கிறது. அது தெரி யாமல்தான் நீயும் ஒருத்தன் இருக்கின்றுய், தாய் மாமன் என்ற முறையில், வெட்கக்கேடு ! ஆண் இனத்திற்கே அவமானம் !

சேகர்.—சரி மேலே படி. (மூர்த்தி படிக்கிறுன்.)

" நீங்கள் நல்லிடைக்குறிச்சிக்கு வர உத்தேசித்திருப் பதைக்கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இங்கு வரும் தேதியை நான்கு நாட்களுக்கு முன்பாகவே தெரிவிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். அதோடுகூட காட்டுப்பட்டியை விட்டுப் புறப்படுந் தேதி வித்தையூரில் தங்கும் நாட்கள் : . .

மூர்த்தி.—....ம்.... ! மோகன் காட்டுப் பட்டியைவிட்டுப் புறப்படப்போகிறுன். பிறகு வித்தையூரில் தங்கப் போகிறுன்.... ! ......ம் !

சேகர்.—மூர்த்தி ! என்ன ! ஆராய்ச்சியில் இறங்கிவிட்டாய் ? கடிதத்தை முடித்துவிடு. பிறகு யோசித்துக்கொள்ள லாம்.

மூர்த்தி.—அதுவுஞ்சரிதான். (மூர்த்தி மேலே படிக்கி றுன்.)

" காட்டுப்பட்டியை விட்டுப் புறப்படுந்தேதி வித்தையூரில் தங்கும் நாட்கள் முதலியவைகளையும் குறிப்பிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

' தெய்வத்தால் ஆகாது எனின் முயற்சி தன்
மெய் வருத்தக் கூலி தரும் '

சேகர்.—இதன் பொருள் ?

மூர்த்தி.—சொல்ல வேண்டுமா ? சொன்னல் உயிரை விட்டுவிட மாட்டாயே !

சேகர்.—தலைக்கு மேலே போய்விட்டது. இனி சாண் போனு லென்ன முழம் போனுலென்ன ?

மூர்த்தி.—தெய்வத்தால் ஆகாவிட்டாலும் முயற்சி செய் தால் முடிந்து விடுமாம் !

சேகர்.—எது ?

மூர்த்தி.—கல்யாணம்.

சேகர்.—அப்படின்னு ? புரியவில்லையே !

மூர்த்தி.—விதி சதி செய்து பிரித்தால்கூட முயற்சி செய் தால் நாமிருவரும் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்பதை மறைமுகமாக ஹேமா மோகனுக்கு தெரி விக்கின்றுள். இப்பொழுது புரிகிறதா ?

சேகர்.—என்ன ! திறை மறைவில் காதல் நாடகம் ? மனதை திறந்துகாட்டும் மறைமுகக் கடிதம் ! தந்தைக்கு விரோதி ! ஆனுல் மகளுக்குக் காதலன் ஹேமா ! உன் பகுத்தறிவு மறத்துப் போய்விட்டதா ? பண்பு பாழ டைந்து விட்டதா ? மதிகெட்ட உனக்கு மாதர்குல மாணிக்கமென்று ஒரு பட்டமா ! ஏகபத்தினியின் இழிச் செயலை இதோ அம்பலப்படுத்துகின்றேன். மூர்த்தி ! எங்கே அக் கடிதம் ? கொடு இங்கே !

மூர்த்தி.—ஏன் ? கடிதம் எதற்கு ?

சேகர்.—மெத்தப் படித்தவளின் வித்தைகளை அத்தானிடம் காட்டத்தான் ?

மூர்த்தி.—அவசரப்பட்டுவிடாதே ! அத்தான் எதற்கு ?

சேகர்.—வேறு என்ன செய்வது ?

மூர்த்தி.—முதலில் இந்த லெட்டரை தபாலில் போட்டு விட்டு வரவேண்டும்.

சேகர்.—என்னப்பா இது ? விசித்திரமான யோசனை ! இந்த லெட்டர் நம்மிடம் இருந்தாலல்லவா ஹேமாவை மிரட்டி உருட்டி பணிய வைக்கலாம் !

மூர்த்தி.—சரிதான் உன் மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் ஹேமா பணிந்துவிடுவாள் என்று மனப்பால் குடிக்காதே, அந்தக் காலம் மலையேறி விட்டது. இனி நம்முடைய போராட்டத்தை வேறு திசையில்—மோகன் இருக்கும் இடத்தில்தான் ஆரம்பிக்கவேண்டும்.

சேகர்.—மூர்த்தி நீ சொல்லுவது ஒன்றும் புரியவில்லை.

மூர்த்தி.—இக் கடிதத்தை மோகன் பார்க்கவேண்டும். பிறகு அவன் ஹேமாவுக்கு இங்கு வரும் நாளை குறிப்பிட்டு கடிதம் எழுதுவான். அதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சேகர்.—அதை தெரிந்துகொண்டு என்ன செய்யப்போகின்றாய்.

மூர்த்தி.—என்ன செய்யப் போகின்றேன் என்று கேட்கின்றாய் ? மோகனை இரண்டு துண்டமாக்கி மண்ணில் புதைத்து மகிழப் போகின்றேன்.

சேகர்.—என்ன உண்மையாகவா ! ?

மூர்த்தி.—ஆம் ! உண்மையாகவேதான் ! என் அஞ்சுகிறாய் ? உடலிலே ஓடும் இரத்தம் சுண்டிவிட்டதா ? நரம்புகளின் உணர்ச்சி உறங்கிவிட்டதா ? தன்மானம் தளர்ந்து விட்டதா ? மலைபோல மாமன் நீ இருக்க மாற்றானிடம் மையல்கொள்கின்றாளே மருமகள் ஹேமா ? இது உன் உள்ளத்திலே தைக்கவில்லையா ? காத்திருக்கும் உன் உள்ளம் ஆத்திரம் கொள்ளவில்லையா ? இப்பொழுது சொல், மோகனை இனியும் விட்டு வைக்கலாமா ? உயிரோடு வாழவிடலாமா ?

சேகர்.—கொலை செய்து விடலாம் மோகனை, ஆனால் நம்முடைய நிலை ? தூக்குக் கயிற்றிலே தொங்கவிட்டு ஆட்டிடுவாங்களே, அதற்கென்ன செய்யப் போகின்றாய்.

மூர்த்தி.—ஹேமா வேண்டுமென்றால் இதைச்செய் ! உன் கற்பனை கோட்டைகள் பொற்புடன் விளங்கவேண்டுமானால் என்னோடு வா. உன்னுடைய எதிர்கால வாழ்க்கை இன்பக் கதிர்கள் ஈயவேண்டுமென்றால் நான் சொல்வதைக் கேள். இல்லை. முறைப் பெண் முத்தங் கொடுக்கட்டும் மூன்றாவது மனிதனுக்கு என்று எண்ணிவிட்டால் முடங்கிக்கிட ஓர் மூலையில், தடுப்பாரில்லை. எங்கிருந்தோ வருபவன் எழடுக்கு மாளிகையிலே இன்னிசை பாடிக்கொண்டு, ஏற இறங்க லிப்டோடு (Lift) உல்லாசமாக வாழட்டும் என்று நீ ஒதுங்கிவிட்டால், உரிமையுடைய நீ ஒண்ணரைக் காசுக்கு சிங்கி அடிக்க ஒப்புக் கொண்டுவிட்டால், உட்கார்ந்துவிடு. ஒறுப்பாரில்லை. கோழையாக கோடியாண்டு வாழ்வதைக்காட்டிலும் வீரனாக ஒரு விநாடியில் மடிவது மேலல்லவா ? எண்ணிப்பார் இதை !

சேகர்.—மூர்த்தி ! போதும் ! நிறுத்து. வெந்தபுண்ணிலே வேலைப் பாய்ச்சாதே ! நைந்த உடலிலே நஞ்சை செலுத்தாதே. கடிதத்தைக் கொடு இங்கே, போஸ்ட்டில் சேர்த்துவிட்டு வருகிறேன்.

(சேகர், மூர்த்தி கையிலிருக்கும் கடிதத்தை பிடுங்கிக் கொண்டு திரும்புகிறான்)

மூர்த்தி.—சேகர் ! நில் ! உன் வேலை போஸ்ட்டு செய்வதோடு மட்டும் நின்று விடவில்லை.

சேகர்.—இன்னும் என்னவெல்லாம் செய்யவேண்டுமென்கிறாய் ?

மூர்த்தி.—தினமும் காலையில் போஸ்டாபீசுக்கு சென்று ஹேமாவுக்கு வரும் கடிதங்கள் அத்தனையும் சென்சார் பண்ணவேண்டும்.

சேகர்.—தினமும் கடிதங்களை வாங்கிக் கொண்டுவந்து உன் கையில் கொடுத்துவிடுகிறேன். சரிதானே !

(திரை விழுகிறது)

காட்சி 15.

இடம் : மோகனின் வீடு.
காலம் : முன்னிரவு.

நடிகர்கள் : மோகன், மோகனின் தங்கை பால்மொழி, வேலமுத்து.

(மோகனின் தங்கை பால்மொழி நடனமாடிக்கொண்டிருக்கிறாள். மோகன் அதை ரசித்துக்கொண்டிருக்கிறார். நடனம் முடிகிறது.)

மோகன்.—அபாரம் ! மார்வலஸ் ! பால்மொழி ! உன் நடனம் சாதாரணமானதல்ல. தெய்வீக நடனம் ! காணக் கண் கோடி வேண்டும். பாவத்தை நீயாக ஒருத்தி அழைக்கவில்லை. அதுவாக வந்து களிநடனம் புரிகின்றது. பால்மொழி ! நீ இப்போது குற்றவாளி.

பால்.—ஏன் ! என்ன குற்றம் செய்துவிட்டேன் ?

மோகன்.—குற்றத்தைச் சொன்னால் ஒப்புக்கொள்ளுகின்றாயா ?

பால்.—சொன்னால் அல்லவா தெரியும்.

மோகன்.—இவ்வளவு சிறந்த முறையில் நடனமாட கற்றுக்கொண்டிருக்கும் நீ இதற்குமுன்பு ஒரு நாளாவது உன் தமையனாகிய இந்த மோகனிடம் ஆடிக் காட்டியிருக்கிறாயா ?

பால்.—ஆமாம் ! நான் குற்றவாளிதான் ! என் அண்ணு ? அதற்கு என்ன தண்டனை ?

மோகன்.—சொல்லட்டுமா.

பால்.—......ம்......

மோகன்.—என் நண்பன் வீரராகவனிடம் உன்னை பிடித்துக் கொடுத்துவிடப் போகின்றேன்.

பால்.—போ ! அண்ணு ! சதா உனக்கு இதுதான்! இதோ பார் இப்போதே நான் ஊருக்குப் போகப்போகின்றேன்.

(பால்மொழி ஓடுகிருள். உடனே திரும்பி வருகிருள்.)

பால்.—அண்ணு ! யாரோ வேலமுத்துவாம் வந்திருக்கிறர்.

மோகன்.—வேலமுத்துவா ! வரச்சொல்லு.

(வேலமுத்து வருகிருன்.)

மோகன்.—நாளைக்கு வித்தையூர் Camp, பள்ளத்தூர் Bridge Work-ஐ பார்வையிடவேண்டும். தேசிய அபிவிருத்தித்திட்டத்தில் எந்தவிதமான வேலையும் அந்தப் பக்கங்களில் நடைபெறவில்லை. அது சம்பந்தமா அங்குள்ளவர்களைப் பார்க்கவேண்டும்.

வேல.—ஆமாங்க அந்தப் பக்கமே ரொம்ப பிற்போக்கானதுதாங்க. அந்தப் பக்கத்திலே சில வேலைகள் அவசியம் செய்யனுங்க.

மோகன்.—நம்ம ஜனங்களுக்கு நல்லது கெட்டதே தெரியவில்லை. இப்போது நடைபெற்று வருகின்றதே சமுதாய அபிவிருத்தித்திட்டம் தேசிய வளர்ச்சித்திட்டம் இவைகளிலுள்ள நன்மைகளெல்லாம் என்றைக்கும் கிடைத்துக்கொண்டிருக்குமென்று எதிர்பார்க்கமுடியுமா ?

வேல.—"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்" அது இந்த ஜனங்களுக்கு எங்கே புரியுது ?

மோகன்.—இந்த திட்டங்களை பயன்படுத்திக்கொண்டு ஒவ்வொரு கிராமமும் முன்னேறனும். ஒவ்வொரு கிராமமும் நல்ல சாலையால் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கு குறைந்தது, ஒரு பள்ளிக்கூடம், ஒரு வைத்தியசாலை, குடிதண்ணீர் வசதி, இவைகள் அவசியம் இருக்கவேண்டும். இவ்வசதிகள் இல்லாதவர்கள் முயற்சி செய்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேல.—இவைகள் எல்லாவற்றையும் வித்தையூர் ஜனங்களிடம் நல்லா படியும்படி எடுத்துச் சொல்லுனுங்க.

மோகன்.—சரி ! நீங்கள் வித்தையூரில் இருங்கள். நான் நாளைக்காலை அங்கு வருகிறேன். வித்தையூரில் இரண்டு நாள் தங்க உத்தேசம்.

வேல.—சரிங்க.

மோகன்.—ஆமாம் ! வித்தையூர் முசாபரி பங்களா வாட்சுமேன் சௌகர்யமா இருக்கானு ?

வேல.—இருக்காங்க.

மோகன்.—அவனிடஞ் சொல்லி பங்களாவை நல்லா வச்சிருக்க சொல்லுங்க. யாராவது Camp பண்ணினுத் தான் கூட்டுவான் போலிருக்குது.

வேல.—......அப்படி ஒன்னுமில்லே வயசாயிடுச்சு.

மோகன்.—வித்தையூரிலிருந்து நல்லிடைக்குறிச்சிக்கு போவதாகவும் உத்தேசம். சச்சுதானந்தம் பிள்ளை மகள் ஹேமாவுக்குக்கூட 22-ம் தேதி வருகிறேனென்று இன்று கடிதம் எழுதியிருக்கிறேன்.

(திரை விழுகிறது.)

காட்சி 16.

இடம் : குடிசைக்கு அருகில்.
காலம் : காலை நேரம்.

நடிகர்கள் :—சேகர், மூர்த்தி & ராமு.

(குடிசைக்கருகில் சேகரும் மூர்த்தியும் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு பேசிக் கொள்கிருர்கள்.)

சேகர்.—20உ இன்றைக்குத்தான்.

மூர்த்தி.—ஆமாம் ! இன்றைக்கும் நாளைக்குந்தான் மோகன் வித்தையூரிலே தங்கப்போகிருன். காரியத்தை வித்தையூரில் இருக்கும்போதே முடித்துவிடலாம்.

(ராமு அந்தப் பக்கமா வருகிறவன் சேகர் மூர்த்தி இருவரும் பேசிக்கொள்வதைப் பார்க்கிருன். சந்தேகப்படுகிருன். ஒளிந்திருந்து கவனிக்கிருன்.)

சேகர்.—ஏன் ? அங்கு என்ன சௌகர்யம்.

மூர்த்தி.—பக்கத்திலே பெரியகாடு இருக்குது. ஊரும் சின்ன ஊரு. ஒதுக்குப்புறமாகவும் இருக்குது. உதவிக்கு யாரும் வரவும் மாட்டார்கள்.

சேகர்.—இந்த லெட்டரை ஹேமாவுக்கு அனுப்பிவிடலாமா ?

மூர்த்தி.—வேண்டாம். ஹேமாவுக்கு விஷயம் தெரியாமல் இருப்பதே மேல். சரி கிளம்பு. இனி தாமதிக்கக் கூடாது. உடனே மொட்டை கட்டை இருவரையும் சந்திக்க வேண்டும். (மூர்த்தி செல்கிருன். தொடர்ந்து சேகரும் செல்கிருன். மறைவிலிருந்து கொண்டிருந்த ராமு வெளியில் வந்து கூறுகிருன்) :—

கில்லாடிப் பயல்களே ! பொல்லாத செயல்களுக்குத் துள்ளாத் துள்ளுகின்றீர்களே ! சதியா செய்கிறீர்கள் ! சதி ! அவனை இவன் அடிப்பது. இவனை இன்னொருவன் கவிழ்ப்பது இவ்விதம் சதி செய்து சதி செய்து தானே நாடு இந்த கதியில் இருக்கிறது. மதியற்ற இச்செயல்களுக்கெல்லாம் விதியென்று பெயரா ? உளுத்தர்களே ! உங்கள் இருவரையும் இன்று நான் விடப்போவதில்லை. நர்ஸிங் ஹோமுக்கும் போகப்போவதில்லை. டாக்டர் கேட்டால் சொல்லிக்கொள்ளுகிறேன். மறைந்திருந்து மர்மங்களை தெரிந்துகொண்டு உங்களை மட்டந்தட்டாவிடில் ராமு அல்ல நான்.

(திரை விழுகிறது.)

....திருமங்கலம் வட்டாரத்திலுள்ள கே. அம்மாபட்டியில் சிறுமிகள் கரகம் ஆடுகின்றனர்....

....லாலாபுரத்திலுள்ள நடிகர் சங்க உறுப்பினர்களின் கோலாட்ட நிகழ்ச்சி....



....திருமங்கலம், பி. கே. நாடார் உயர்தர பள்ளியில் மாதிரி கோழிப் பண்ணை....



....திருமங்கலம் பி. கே. நாடார் உயர்தர பள்ளியைச்சேர்ந்த கோழிப்பண்ணையில், மாணவர்களுக்குக் கோழி வளர்ப்பு பற்றி போதிக்கப்படுகிறது....



....திருமங்கலம் வட்டாரத்திலுள்ள ஊராண்டாரப்பனூர் சமூகக் கல்வி நிலையத்தில் நடைபெறும் கூட்டம்....



....லாலாபுரத்திலுள்ள பஜனை கோஷ்டி...... இக்கோஷ்டிக்குத் தேவைப்பட்ட சங்கீத வாத்தியங்கள் தேசிய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன....



......எம். போத்தனதியில் உள்ள காங்கேய இனக் காளை... ..



......எம். போத்தனதி கிராமத்தில் முர்ரா எருமை வளர்க்கப்படுகிறது......

காட்சி 17.

இடம் : நடுக்காடு.
காலம் : மாலை நேரம்.

நடிகர்கள் : சேகர், மூர்த்தி, மொட்டை, கட்டை & ராமு.

(சேகர், மூர்த்தி இருவரும் நின்றுகொண்டிருக்கிறார்கள். மொட்டையும், கட்டையும் வருகிறார்கள். ராமு தூரத்தில் மறைந்திருந்து கேட்கிறான்.)

மூர்த்தி.—மொட்டை ! என்ன சொல்றே ?

மொட்டை கட்டையைப் பார்க்கிறான்.

கட்டை ஒரு விரலைக் காட்டுகிறான்.

மொட்டை.—இது பெரிய இடத்து விசயங்க. ஆயிரத்துக்குக் குறைஞ்சு முடியாதுங்க.

சேகர்.—சரி ! ஆயிரங்கொடுத்துடுறோம். காரியத்தை காதுங் காதும் வச்சாப்பிலே செஞ்சுடனும்.

மூர்த்தி.—வீட்டுக்குப் போயிட்டு வந்து அட்வான்ஸ் தாரோம். நான் சொன்னபடி எல்லாவற்றையும் தோது பண்ணி வச்சுப்புடுங்க.

மொட்டை.—சரிங்க ! நாங்க போறோங்க !

மூர்த்தி.—நீங்க போகலாம் (மொட்டையும் கட்டையும் போகிறார்கள். மூர்த்தி சேகரிடம் சொல்கிறான்).

மூர்த்தி.—மணி ஏழு ! வேகமாக வீட்டிற்குச் சென்று பணம் 3,000-மோ 2,000-மோ எடுத்துக்கிட்டு சீக்கிரமா வந்துடு.

சேகர்.—பணம் அவ்வளவு வேண்டுமா ? என்னமோ அகப்பட்டதை யெல்லாம் சுத்திகிட்டு வந்துடுறேன்.

சேகர் செல்லுகிறான். மூர்த்தியும் செல்லுகிறான். ராமு வெளியில் வருகிறான். அவன் சொல்கிறான் :—

அட பாவிகளா ! மோகனையா கொலை செய்ய சூட்சி ! வீழ்ச்சியுறச் செய்கிறேன் பார் ! மாட்சிமைகொண்ட மோகனின் முன்பு உங்களுடைய தாழ்ச்சி மனப்பான்மை செல்லாது. அன்பே உருவான எங்கள் மோகன் உங்களுக்கு என்ன தீங்கடா செய்தார் ?

(திரை விழுகிறது.)

காட்சி 18.

இடம் : ஹேமாவின் வீடு.
காலம் : இரவு மணி ஒன்பது.

நடிகர்கள் : ஹேமா, ராமு, கந்தன், சச்சுதானந்தம்.

(ஹேமா கலவரத்தோடு நின்று கொண்டிருக்கிறாள். பரபரப்போடு ராமு பேசிக்கொண்டிருக்கிறான்.)

ராமு.—இவ்வளவையும் என் கண்களாலேயே பார்த்தேன் டாக்டர் ?

ஹேமா.—என்ன ? சத்குணவதி சாந்தவல்லியின் தம்பி—அன்பின் உருவம் அருணாசலம் பிள்ளையின் மகன்—என்மாமன் சேகரா மோகனை கொலை செய்யத்திட்டமிட்டுள்ளார் ! ? உண்மையாக இருக்குமா....?

அசரீரி.—(ஹேமாவின் உள்ளத்தில் எதிரொலிக்கின்றது.) என் உண்மையாக இருக்காது ? வஞ்சித்து வாழும் வன்கணார் மிகுந்த இவ்வையகத்தில் என் நடவாது ? உலகம் போற்றும் உத்தமரையே இன்று செய்தவருக்கும் இனிமையே செய்யும் இதயங்கொண்ட இந்தியப் பிதாவையே கொல்ல வில்லையா ஒருவன். பெண்ணாசை ! பேராசை ! கோர உருவம் உண்டு. அதற்கு மாறான செயல்களுக்கு மனதைத் தூண்டும் தன்மையும் உண்டு.

ராமு.—டாக்டர் ! இனி தாமதிக்கக் கூடாது. மணி 10. இன்னும் இரண்டு மணி நேரத்தில் மோகன் கொலை செய்யப் பட்டுவிடுவார். அதற்குள்ளாக நாம் வித்தையூருக்குச் செல்ல வேண்டும். கார் வாங்குங்கள் என்று கதறினேன் கேட்கவில்லை. இப்போது என்ன செய்வது இந்தப் பட்டிக் காட்டில் ?

ஹேமா.—ராமு ! கந்தனைக் கூப்பிட்டு வண்டியை பூட்டச் சொல்லு. போகிற வழியில் முல்லையூர் நல்லகண்ணு முதலியார் கார் கிடைத்தால் அதில் போய்க் கொள்ளலாம்.

(ராமு திரும்புகிறான். கந்தன் பரபரப்போடு ஓடி வருகிறான். ராமு அவனை தடுத்து நிறுத்துகிறான்.)

ராமு.—அண்ணே வண்டியை பூட்டிக்கிட்டு வா. சீக்கிரம்......போ !

கந்தன்.—என் ? எதுக்கு ?

ராமு.—டாக்டர் உடனே வெளியூருக்குப் போக வேண்டியிருக்குது.

கந்தன்.—கொளந்தே ! வெளியேப் போகப் போவுதா ? இப்பவா ! ஐயய்யோ ! போகாதே கொளந்தே ! போகாதே ! ஐயாவுக்கு ஆபத்து !

ஹேமா.—என்ன ? அப்பாவுக்கு ஆபத்தா !?

கந்தன்.—ஆமாம் கொளந்தே கால் முறிஞ்சுப் போச்சு !

ஹேமா.—கால் முறிஞ்சுப்போச்சா ! என் ?

கந்தன்.—இரும்புப்பெட்டி திறந்து கிடக்குது. 3,000 ரூபாய் பணத்தைக் காணோம்.

ராமு.—சேகர்தான் எடுத்துக்கொண்டு போயிருக்க வேண்டும்.

ஹேமா.—என்பணத்தைக் கொண்டே எனக்குத் தீங்கு செய்கிறார் சேகர் ! கால் எப்படி முறிஞ்சுது ?

கந்தன்.—உங்களிடம் விஷயத்தைச் சொல்ல வந்தாங்க அப்போ மாடிப்படி வழுக்கி விழுந்துட்டாங்க.

ராமு.—அட கடவுளே ! இப்போதுதானா ஐயாவுக்குக் கால் முறியவேண்டும் ? டாக்டர் ! நீங்கள் ஐயாவை கவனித்துக் கொள்ளுங்கள். பெற்றவரைவிட மற்றவர் யாரும் உயர்ந்தவரில்லை. நான் செல்கின்றேன், மோகனை விடுவிக்க. கவலையை விடுங்கள்.

ஹேமா.—ராமு ! நீ ஒரு ஆள் சென்று ஒன்றும் செய்துவிட முடியாது. சைக்கிளில் நேரே காட்டுப்பட்டிக்குச் செல். போலீசிடம் புகார் கொடு. பின்னர் போலீஸோடு வித்தையூருக்குச் செல்.

ராமு.—சரி ! டாக்டர் ! (ராமு போகிறான். சச்சுதானந்தம். நொண்டி நொண்டி நடந்து வருகிறார்.)

சச்சு.—ஐயோ ! வலிதாங்க முடியலையே ! கந்தா ? மடப் பயலே எங்கடா தொலைஞ்சுப் போயிட்டே இங்கே வாயேண்டா ! ?

(கந்தன் ஓடிப்போய் சச்சுதானந்தம் பிள்ளைக்கு அனு சரணையாக நிற்கிறான். அவர், அவன் தோள் பட்டையில் கையை போட்டுக்கொண்டு நடந்து வருகிறார். ஹேமா பெஞ்சு ஒன்றை எடுத்துப்போட்டு அதில் தந்தையை உட் காரவைக்கிறாள். பிறகு காலை பரிசோதிக்கிறாள். ஹேமா கையை வைக்கும் போதெல்லாம் ஹா ! ஹா ! என்று துள்ளுகிறார் ; சச்சுதானந்தம் பிள்ளை.

ஹேமா.—அப்பா ! எலும்பு ஒண்ணும் முறியவில்லை. சாதாரண சுளுக்குத்தான்.

கந்தன்.—நல்ல வேளை ! ஐயாவுக்குக் கால் முறியாமே இருந்துட்டுது ஐயா நேரா நடந்துவரும் போதே பயமா இருக்குது. கால் வேறு நொண்டியாபோயி திருகிக்கிட்டு நடந்தா சரிதான் !

சச்சு.—வேண்டாம் ஹேமா ! வேண்டாம் கையை வைக் காதே தாங்கமுடியலே.

ஹேமா.—கந்தா மருந்துப் பெட்டி.

(கந்தன் மருந்துப்பெட்டியை கொண்டுவந்து வைக் கிறான். ஹேமா ஒரு மருந்தை எடுத்து காலில் போடுகிறாள்.)

ஹேமா.—கந்தா ! வண்டியைப் பூட்டு.

கந்தன்.—எங்கேங்க போகணும் ?

ஹேமா.—வண்டியைப் பூட்டு பிறகு சொல்லுகிறேன்.

(கந்தன் போகிறான்)

சச்சு.—ஹேமா ! எங்கேயம்மா இந்த ராத்திரியிலே போகப் போறே ?

ஹேமா.—முல்லையூரில் ஒரு பிரசவகேஸ். அதற்குப் போக வேண்டும். கந்தனையும் அழைத்துக் கொண்டு தான் போகப்போகிறேன். நீங்கள் நிம்மதியாகப் படுத்துத் தூங்குங்கள்.

சச்சு.—நிம்மதி ! தூக்கம் ! எனக்கா ! ஊ....கு......ம் இனி இந்த ஜென்மத்தில் இல்லை.

ஹேமா.—ஏனப்பா இப்படி வருத்தப்படுகிறீர்கள் ?

சச்சு.—அம்மா ! நாளுக்கு நாள் கிழவன் தானே நான் !

ஹேமா.—இதற்காகவா வருத்தப்படுகிறீர்கள்.

சச்சு.—....ம்....ஆமாம்....அது தான். வெறொன்று மில்லை.

(சச்சுதானந்தம் எழுந்து நடக்கிறார், திரும்பி நின்று "அம்மா ! ஜாக்ரதையாகப் போய்வா ! சேகர் ஏதாவது நடுவழியில் தொல்லை கொடுக்கப் போகிறான்.")

ஹேமா.—அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன் (சச்சுதானந்தம் போகிறார். கந்தன் வருகிறான்.)

கந்தன்.—கொளந்தே ! எங்கே போவணும்.

ஹேமா.—அதைக் கேக்கத்தான் வந்தியோ !

கந்தன்.—புறப்படுங்க கொளந்தே எல்லாம் ரெடியா யிட்டுது.

ஹேமா.—அதற்குள்ளாக வண்டியை பூட்டிப்பிட்டாயா ?

கந்தன்.—வண்டியில்லீங்க.

ஹேமா.—வண்டியில்லாமே ! நடந்தா !?

கந்தன்.—நடந்தா ! கார்லேங்க ! கார்லே !

ஹேமா.—என்னது ? காரா ! இங்கே ஏது கார் ! ?

கந்தன்.—காட்டுப்பட்டி கர்ணகர முதலியார் கார் வந்துச்சு. அதை மடக்கினேன். டிரைவர் மட்டும் ஆங்-ஊங்ன்னு சொன்னாரு. அதெல்லாம் இந்த கந்தனிடமா பலிக்கும் ? ஒரு தினுசா ஆளை அமுக்கி விட்டேன்.

ஹேமா.—சபாஷ் கந்தா ! இன்னும் அறம் இறக்கவில்லை. உலகம் உள்ளளவும் உண்மைக்கு அழிவில்லை.

பூம் ! பூம் !!

(திரை விழுகிறது)

காட்சி 19.

இடம் : வித்தையூர் முசாபரி பங்களா.
காலம் : நடு நிசி.

நடிகர்கள் : மோகன், மொட்டை, கட்டை, தந்தி பையன்.

(எங்கும் காரிருள். முசாபரி பங்களாவின் முன்புறத்தில் நின்று கொண்டிருக்கிறார் மோகன், தனிமையில் பேசிக் கொள்கிறார்.)

மோகன்.—அற்புதமான சிற்றூர். நற்பண்புகள் நிறைந்த மக்கள். இன்பகரமான சூழ்நிலை. (கொட்டாவி விடுகிறார். கடிகாரத்தைப் பாரக்கிறார்.)

மோகன்.—என்ன ? மணி $11\frac{1}{2}$ இயற்கை தரும் எழிலில் மயங்கி காலம் செல்வது கூட தெரியாமல் இருந்து விட் டேனே ! சரி ! இனி தூங்கவேண்டியது தான்.

மோகன் அறைக்குள் சென்று கதவைச் சாத்தி, தாள் போட்டுக் கொள்ளுகிறார். சிறிது நேரத்தில் முகமூடி யணிந்த பயங்கரமான ஒரு மனிதன் ஓசை படாமல் மெது வாக சற்று முற்றும் பார்த்துக் கொண்டு வந்து பங்களா கதவின் ஓர் ஓரத்தில் நின்று கொள்கிறான். உடனே கை ஜாடை காட்டுகிறான். அதே போல் மற்றொரு மனிதன் வந்து கதவின் மற்றொரு பக்கத்தில் நிற்கிறான். முதலில் வந்தவன் மீண்டும் ஜாடை காட்டுகிறான். கையில் கவர், தாள், பென்சில் முதலியவைகளை எடுத் துக்கொண்டு ஒரு பையன் வேகமாக வந்து கதவுக்கு எதிரில் நின்று கொள்கிறான். முதல்வன் மீண்டும் கைஜாடை காட்டுகிறான். பையன் கூப்பிடுகிறான்.

பையன்.—சார் ! சார் ! (கதவைத் தட்டுகிறான்).

சத்தம் ஒன்றும் வரவில்லை. மீண்டும் கதவைத் தட்டுகிறான் சார் ! தந்தி !!

மோ.—என்ன தந்தியா ?

பை.—ஆமாம்! எக்ஸ்பிரஸ் தந்தி, நீங்கத்தானே மோகன்?

(கதவைத் திறந்து கொண்டு வேகமா வெளியே வந்த மோகன், பையனிடமிருக்கும் கவரை வாங்கிக்கொண்டு அவன் நீட்டிய காகிதத்தில் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார். அப்போது கதவுக்கருகில் நின்று கொண்டிருந்த இருவரும் மோகன் வாயில் துணியை வைத்து அழுத்திவிட்டு குண்டு கட்டாகத் தூக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள்.

(திரை விழுகிறது.)

காட்சி 20.

இடம் : நடுக்காடு.

காலம் : நடுநிசி.

நடிகர்கள் : மோகன், சேகர், மூர்த்தி, மொட்டை, கட்டை, ஹேமா, கந்தன், சப்-இன்ஸ்பெக்டர், போலீஸ்.

(மோகனின் கைகள் கால்கள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன, வாயில் துணிச்சுருள் இருக்கின்றது, தரையில் கிடக்கின்றார், அருகில் கட்டை நின்றுகொண்டிருக்கிறான். சேகர், மூர்த்தி, மொட்டை மூவரும் வேகமாக வருகிறார்கள், சேகரும் மூர்த்தியும் மோகனைப் பார்க்கிறார்கள்.)

மூர்த்தி.—சேகர் ! இவனை திடீரென்று கொன்றுவிடுவது பிரயோஜனமில்லை. விஷயங்கள் பூராவையும் கறந்து கொண்ட பிறகு கொல்லலாம்.

சேகர்.—ஆம் ! அதுவுஞ்சரிதான்.

மூர்த்தி.—மொட்டை ! கால்கட்டை அவிழ்த்துவிடு.

(மொட்டை மோகனின் கால்கட்டை அவிழ்த்துவிடுகிறான், மூர்த்தி மோகனின் தோள்பட்டையை பிடித்துத் தூக்கி நிறுத்துகிறான். மோகனின் வாயிற்குள் இருக்கின்ற துணிச்சுருளை இழுக்கின்றான் சேகர்)

சேகர்.—மிஸ்டர் மோகன் ! இப்போது எங்கே இருக்கிறீர்கள் என்பது தெரிகின்றதா ?

மோகன்.—தெரிகின்றது ! வஞ்சகர்களின் அருகில் இருக்கிறேன் என்று !

மூர்த்தி.—வஞ்சகர்களாமே ! வஞ்சகர்கள் ! பேச்சைப்பார் ! பேச்சை ! சேகர் விடுடா ரெண்டு குத்து !

(சேகர் குத்துகிறான். குத்து நாலைந்து விழுகின்றது; பிறகு நிறுத்துகிறான்).

சேகர்.—மோகன்சார் ! போதுமா ? இன்னும் வேணுமா ?

மோகன்.—(கலகலவென சிரிக்கிறான்) சேகர் ! ஏன் நிறுத்திவிட்டாய் ! இன்னும் அடி! உன் வேகம் தணியும் வரையில் அடி ! உன் கைகள் சோர்வடையும் வரையில் அடி !

சேகர்.—(கலகலவென சிரிக்கிறான்).

மோகன்.—சேகர் ! வீண் பிரேமை கொள்கின்றாய் ! என்னை அடித்துவிட்டோமென்றுதானே எக்களிக்கின்றாய் ? மருள் உன் கண்களை மறைக்கின்றது. நீ அடித்த அடிகள் என்மேல் விழவில்லை என்பதை நீ அறியவில்லை. உத்தமர்கள்மீது, பாட்டாளி மக்கள்மீது, நேர்மையாளர்மீது, நீதிகள்மீது, அறத்தின்மீது விழுந்த அடிகளாகும் அவைகள்.

மூர்த்தி.—சேகர் ! இவர் யார் தெரியுமா ? மகான் ! பேர் அறிஞர் ! நீதி போதிக்கிறார் நமக்கு ! கள்ளன் ! கசடன்! புதிய பாதை அமைக்கின்றானாம் ! புதிய பாதை.

சேகர்.—ஏய் ! மோகனத்தூருக்குப் பாதை அமைக்கவந்தாயா ? அல்லது ஹேமாவிடம் மோகவலை வீச முயன்றாயா ? உன் கபட நாடகமா எனக்குத் தெரியாமல் போய் விடும் ?! மடையா ! உண்மையைச் சொல். ஹேமாவிடம் உனக்கு எவ்வளவு நாட்களாகக் கள்ளக்காதலுண்டு ?

மோகன்.—ஆ....ம்! பெண்ணோடு ஆண் தனியே பேசுவது பெருங்குற்றமென வாதாடும் வர்க்கத்தைச் சேர்ந்த வர்கள்தானே நீங்களும் ! உங்களை நொந்துகொண்டு என்ன பயன் ? உங்களை உங்கள் இனத்தவரை உலகில் உலவவிட்டுக்கொண்டு வாளா விருக்கின்றார்களே கோடான கோடி மக்கள். அவர்களை அல்லவா நொந்து கொள்ளவேண்டும்.

மூர்த்தி.—சேகர் ! அவன் உண்மையைச் சொல்லமாட்டான் இனி தாமதிக்கக்கூடாது....ம்.... ஆகட்டும்.

(சேகர் ரெண்டு மூன்று......எட்டு பத்து குத்துகள் விடுகிறான். அவைகளை அனுயாசமாக வாங்கிக்கொண்ட மோகன் கூறுகிறார்).

மோகன்.—சேகர் ! இன்று என்னை நீ அடிக்கலாம், அழித்தும்விடலாம். ஆனால் நான் கொலைசெய்யப்பட்டு விட்டால் இந்த உலகமே சூன்யமாகிவிடும் என்று நீ மனப்பால் குடிக்கிறாய் பார் ! அதுதான் மடத்தனம். நான் கொலைசெய்யப்பட்டுவிட்டேன் என்றால் என்னுடைய உடலிலிருந்து சிந்துகின்ற ஒவ்வொரு துளி இரத்தத்திலும் ஒவ்வொரு மோகன் உதித்தெழுவான் என்பதை மட்டும் நீ மறந்துவிடாதே !

மூர்த்தியும் அடிக்கிறான். சேகரும் அடிக்கிறான். மோகன மயக்கமுற்றுத் தரையில் விழுகிறான்.

மூர்த்தி.—மொட்டை ! கட்டை !........ம......ஆகட்டும் மயக்கம் தெளிந்து எழுந்திருப்பதற்குள் தீர்த்துகட்டிவிட வேண்டும் ஆளை.

" நிறுத்து ! நிறுத்து ! நிறுத்து ! "

சப்தம் வந்த திக்கை சேகர், மூர்த்தி, கட்டை, மொட்டை நால்வரும் பார்க்கிறார்கள் கலவரத்தோடு. மொட்டையும் கட்டையும் ஓட யத்தனிககிறார்கள், சேகரின் உடல் நடுங்குகின்றது, மூர்த்தி மிரள மிரள விழிக்கிறான்.

பரபரப்போடு ஹேமா வருகின்றாள். பின்னோடு கந்தன் மருந்துப் பெட்டியை தூக்கிக்கொண்டுவருகிறான். ஹேமா நினைவற்று தரையில் கிடக்கும் மோகனைப் பார்க்கிறாள்! மோகனை பரிசோதிக்கிறாள். தலையை தூக்கி சேகர், மூர்த்தி, மொட்டை, கட்டை ஆகியோரை பார்க்கிறாள். ஆத்திரம் தொண்டையை அடைக்கின்றது, கண்களில் நீர் வழிந்தோடுகின்றது, கேட்கிறாள்.

ஹேமா.—மாமா! நீங்களா இதைசெய்யத் துணிந்தீர்கள்? என்ன செய்கை இது.

சேகர்.—அதைத்தான் நானும் உன்னைக் கேட்கிறேன். மோகன் யார்? எந்த ஜாதியான்? எங்கே பிறந்தவன்? உனக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்? அவனுக்கு ஆபத்து என்றதும் நீ என் ஓடிவந்தாய்? நடுநிசியிலே அவன் உயிரைக் காப்பாற்ற பதினைந்து மைல் பறந்து வந்திருக்கிறாயே அது என்ன செய்கை என்றுதான் நான் உன்னைக் கேட்கிறேன். ஆடவனைக்காக்க பெண் பிள்ளையாகிய நீ வந்திருக்கிறாயே! அது என்ன செய்கை என்றுதான் கேட்கிறேன். மோகன் கொலைசெய்யப்படப்போகிறான் என்பதைக்கேட்டு நிலைகலங்கி நிற்கின்றாயே அது என்ன செய்கை என்றுதான் கேட்கின்றேன்.

ஹேமா.—மாமா! தப்பாக எதுவும் நீங்கள் எண்ண வேண்டாம். ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறவருக்கு உதவிசெய்வதற்கு ஜாதியும் மதத்தையும் காலத்தையும் தூரத்தையும் பார்த்துக்கொண்டிருக்கமுடியுமா என்னைப் போன்ற டாக்டர்கள்?

சேகர்.—மோகனுக்கு உதவி செய்யவேண்டுமென்று உனக்கு ஆசை ஏற்பட காரணம்? மோகன் உனக்கு ஏற்றிய மோகம்! அவன் கூறிய காதல் மொழிகள் அவன் தந்த முத்தங்கள் அல்லவா மோகனுக்கு உதவி செய்ய தூண்டுகின்றன. காதல் தீ அல்லவா? சுட்டுத் தகிக்கின்றதுபோலும்!

ஹேமா.—அபவாதம்! அபவாதம்! ஐயோ இனியும் இதைப்போல் பேசாதீர்கள்!

சேகர்.—அம்மா பதிவிரதை! தெரியும் உன் லீலா விநோதங்கள்! காதல் நாடகம் நடிக்கும் கன்னி! என் கண்களையா கட்டப்பார்க்கிறாய்? மாமனை மணக்க மனமில்லையாம்! வெட்கங்கெட்டவளே! வெள்ளிவிழா கடிதம் எழுதுகின்றாளாம்! வெள்ளிவிழாக் கடிதம்! சாகசக்காரி! உன்னை சந்தி சிரிக்கவைக்கிறேன் பார். படித்து என்ன? பட்டம் பெற்றுதான் என்ன! கற்பை விலை கூறிய காதகி! உன்னைக் காண்பதுகூட பாபமாச்சே! கண்டவனோடெல்லாம் காதல் கீதம் பாடும் உன் படித்த பண்பை இன்று என் தமக்கை உயிரோடுஇருந்து...... தமக்கை மகளென்று சொல்லக்கூட கூசுகின்றதே நாக்கு—பார்த்தால் என்னசெய்வாள் தெரியுமா? குலத்தைக் கெடுக்கவந்த கோடாறிக்காம்பே..........

மூர்த்தி.—சேகர் நேரமாகிறது! உம்

சேகர்.—ஆம் தமக்கை மகளின் கற்பைக் களவாடிய காதகனை காசினியில் இனி காலடி வைக்க விடமாட்டேன். என் குடும்பத்தின் பெருமையினை குலைத்த கசடனை குவலயத்தில் இனி இருக்கவிடமாட்டேன், மொட்டை, கட்டை உம்—ஆகட்டும்.

ஹேமா.—ஐயோ! மாமா உங்கள் காலடியில் விழுந்து கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எது செய்யச்சொன்னாலும் செய்கிறேன். மோகனைமட்டும் ஒன்றும்செய்யாதீர்கள். அவரை விட்டுவிடுங்கள்.

சேகர்.—ஏன்? மோகன் தரவேண்டிய காதற் கடன் இன்னும் ஏதாவது பாக்கி இருக்கின்றதோ?

ஹேமா.—மாமா! வேண்டுமானால் கொன்றுவிடுங்கள் என்னை, மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் கடுஞ்சொற்களால் சுடாதீர்கள்.

சேகர்.—மோகனை விட்டுவிடவேண்டுமென்றால் நீ என்னை கல்யாணம் செய்துகொள்ள சம்மதிக்கவேண்டும்.

(சிறிது நேரம் ஹேமா சிந்திக்கிறாள்)

ஹேமா.—சரி சம்மதிக்கிறேன் மாமா!

சேகர்.—ஹேமா! அப்படிச் சொன்னால் மட்டும் போதாது. இன்று சரி என்பாய்! நாளைய தினம் முடியாதென்பாய்! நான் சேகர் மாமாவை மனப் பூர்வமாக நேசிக்கிறேன் அவரை கல்யாணம் செய்துக்கொள்கிறேன் என்று சத்தியம் செய்யவேண்டும்.

ஹேமா.—நான் சேகர் மாமாவை மனப்பூர்வமாக......

ஹேமாவின் வாக்கியம் முடிவதற்குள் விசில் சப்தம் கேட்கிறது. நாலைந்து போலீஸ் ஜவான்களுடன் சப்-இன்ஸ்பெக்டர் வருகிறார். "144, 205 பிடியுங்கள் அவர்கள் அனைவரையும்."

மொட்டை.—ஐயய்யோ! போலீஸ்! போலீஸ்! அடேகட்டே! நம்ப குடும்பம் எல்லாம் மொட்டைதான்டா!

(திரை விழுகிறது.)

(தொடரும்.)

சிதம்பரம் வட்டாரத்தில்.

இவ் வட்டாரத்திலே, 1956, மே மாதத்தில், சி. முதலூரில், நதி நீரிறைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்தின்மூலம், மேலும் 50 ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதிகிட்டும். பாளையங்கோட்டையிலிருக்கும் வார்தா செக்கு பயிற்சி நிலையத்தில், மூன்றாவது கோஷ்டியினருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பழத்தோட்ட சாகுபடி செய்ய, 60 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. கனி தரும் மரக் கன்றுகளைத் தருவித்து, மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

ஐந்து திங்களில் அரிய சாதனைகள்

(ஸ்ரீ லா. க. மாசிலாமணி, கிராம சேவக், களம்பூர் மண்டகொளத்தூர் வட்டாரம்.)

[மண்டகொளத்தூர் வட்டாரத்திலுள்ள வள்ளுவர் நகரில் என்னென்ன அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகின்றன என்பது பற்றி இக் கட்டுரையில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

—ஆசிரியர்]

சுமார் 75 குடிசைகளில் 500 ஹரிஜன மக்கள் வசிக்கும் இடம் " வள்ளுவர் நகர். " அன்றாடம் கூலி வேலை செய்து அரை வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ளும் ஏழை விவசாயிகள் அவர்கள். ஆனால் உற்சாகமுற்ற உழைப்பாளிகள்; தன்னல மற்றவர்கள் ; ஒற்றுமையால் உயர்வை அடையும் உளத்தினர்.

கடந்த 1955-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில், நான் முதல் முதலில் அவர்களைச் சந்தித்தேன். தேசிய வளர்ச்சித் திட்டத்தின் நன்மைகளையும் அவர்களின் கடமையைப் பற்றியும் எடுத்துரைத்தேன். கடந்த 20 ஆண்டுகளாய் " அமிர்தலிங்கம் " என்னும் பெரியாரின் ஆலோசனையின் கீழ் ஒற்றுமையைக் கடைப்பிடித்து உழைத்து வரும் அந்த ஹரிஜன மக்கள், தங்களுக்கு, முதியவர்கள் பயிலும் பாடசாலை யொன்றும், சமுதாயக் கலைக்கூடம் ஒன்றும் (ரூ. 2,000-0-0 மதிப்பீட்டில்) வேண்டுமென்றும் விரும்பினர். ஆனால் இம்மாதிரி ஒரு கட்டிடம் கட்ட அவர்கள் கொடுக்கவேண்டிய பங்குத் தொகையை எவ்வாறு அவர்களால் கொடுக்கமுடியும் என்று ஐயுற நேர்ந்தது. ஆனால் பழகினால்தானே தெரியும் பாட்டாளியின் பண்பும் திறனும். திருவள்ளுவர் நகர மக்கள் அதற்குப் பின்வாங்கவில்லை. 50% கொடுப்போம் என்று வாக்குறுதி அளித்தனர். சுமார் ரூ. 2,000 மதிப்பீட்டில் கட்டிட வேலை நடந்து வருகிறது. முடியும் தறுவாயிலுமுள்ளது. பணம் கொடுக்கும் நிலையிலுள்ளவர்கள் பணம் கொடுத்தனர் ; பணமில்லாதோர் தங்கள் அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தையும் உதறித்தள்ளி உழைப்பைக் கொடுக்கின்றனர் ; இளைஞன், வயோதிகன் ; சிறியோர், பெரியோர் என்ற வேறுபாடில்லாமல் வேலை செய்கிறார்கள். இன்னுமோர் திங்களில் அவ்வரிய கட்டிடத்தின் வேலைப்பாடு முடிந்துவிடும்.

சிறுர்களின் விளையாட்டுப் பூங்கா

தினம் கூலி வேலை செய்து கிடைத்த வருவாயில், சக்திக்குத் தகுந்தவாறு ஒவ்வொருவரும் கொடுத்த ஊதியத்தைச் சேர்த்து, மொத்தம் ரூ. 50 பணமாக நன்கொடை கொடுத்து சிறுவர்கள் விளையாடிமகிழ குழந்தைகளின் விளையாட்டுப் பூங்கா ஒன்று அமைத்து அதிலே சிறுர்கள் சந்தோஷத்துடன் விளையாட சறுக்காம் பாறை, ஊஞ்சல் பலகை, விளையபார் முதலியன பொருத்தப் பெற்றுள்ளன. மாலையிலே இளஞ்சிறுர்கள் விளையாடும் காட்சி கண்ணுக்கினிய விருந்தையும், மனதிற்கு மகிழ்ச்சியையும் உண்டாக்குகிறது.

இப் பூங்கா 1955-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ந் தேதி அன்று, அப்பொழுது மண்டகொளத்தூர் வட்டார அபிவிருத்தி அதிகாரியாயிருந்த ஸ்ரீ எஸ். நாராயணசுவாமி, B.A., அவர்களால் சிறப்பான முறையில் திறந்து வைக்கப்பட்டது. தவிர அன்று விளையாட்டு விழாவும் நடந்தது. நானும் எங்கள் வட்டார சமூகக்கல்வி அமைப்பாளரும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தோம். பாதி விளையாட்டிலே கொட்டும் மழை அதனுடைய விளையாட்டைக் காண்பித்து விட்டது. ஆயினும் அம்மழையிலும், எங்களுக்கும் ஆண்கள் பெண்கள் அடங்கிய சுமார் 350 மக்களுக்கும் இடைவிடாது உற்சாக மூட்டியும் விளையாட்டு விழாவை நடத்திக் கொடுத்த பெருமை எங்கள் வட்டார, விவசாய வளர்ச்சித் திட்ட அதிகாரி; ஸ்ரீ ஆர். ராமதாஸ், B.Sc. (Agr.), D.I.H., அவர்களையும், வள்ளூர் பஞ்சாயத்துத் தலைவர் ஸ்ரீ வி. என். ராமராவ் அவர்களையும்தான் சாரும். இந்த விளையாட்டுப் போட்டியில் அந்த ஹரிஜன மக்களில் சுமார் 40 ஆண்களும் 30 பெண்களும் மற்றும் அருகிலுள்ள கிராம பள்ளி மாணவர் சுமார் 100 பேரும் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசும் கொடுக்கப்பட்டது.

கடந்த 1956-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ந் தேதி அன்று ஒரு முதியோர் கல்வி பயிலும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. 8 வயது முதல் 18 வயது வரையிலுள்ள சுமார் 27 பேர் (முதியோர்) கல்வி பயின்று வருகிறார்கள். ஆசிரியர் ஸ்ரீ முனுசாமி மிகச் சிறந்த முறையில் அப்பள்ளியை நடத்தி வருகிறார். அம்மாணவர்களுக்கு முக்கியமாக விவசாயம், பொது விஷயம், திருக்குறள் முதலியனவும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. தவிர அம் மாணவர்கள் ஒவ்வொருவரும் இம்மூன்று மாதகாலத்தில் தமிழ் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டுள்ளனர் என்பதை நினைக்க மகிழ்ச்சியுண்டாகிறது.

தவிர சமூகக் கல்வி நிலையம் ஒன்றும் நிறுவியுள்ளோம். அதற்கும் ஹரிஜன மக்கள் $\frac{1}{2}$ பாகம் பணமாக நன்கொடை

கொடுத்துள்ளனர். தினத்தாள் ஒன்றும், வார இதழ், மாத இதழ் ஆகியவையும் அந்நிலையத்தில் போடப்பட்டு வருகின்றன. எந்த வேலையிருந்தாலும் மாலை 5 முதல் 6½ மணி வரை இதற்கென்று தங்கள் முழுகவனத்தையும் செலுத்தி " திருவள்ளுவர் நகர் " மக்கள் பயனடைகின்றனர். என்னே இம் மக்களின் உற்சாகம்.

" திருவள்ளுவர் நகர் "

வள்ளுர்சேரி என்றிருந்த இந்த பெயரை " திருவள்ளுவர் நகர் " என்ற பெயராக ஸ்ரீ எஸ். எம். சுலைமான், B.Sc. (Ag.) (தென் பிராந்திய உதவி அபிவிருத்திக் கமிஷனர், கோயம்புத்தூர்) அவர்களால் 1956-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23உ அன்று நிறுவப்பட்டது. சுமார் 54 வீடுகள் கட்ட ஏற்படுத்தியுள்ள காலனிக்கு (Colony) அஸ்திவாரக் கல்லையும் நாட்டிய பெருமை அன்னாரைத் தான் சாரும். அன்றைய தினத்திலிருந்து தான் " வள்ளுவர் நகர் " என்று வழங்கப்பட்டு வருகிறது.

அரசாங்கத்தாரால் நிறுவப்பட்ட ஊழியர்கள்தான் " தேசிய வளர்ச்சித் திட்டத் " தின் நோக்கத்தைப் பொது மக்களுக்கு எடுத்துரைத்து காரியத்தை நிறைவேற்றுகின்றன ரென்றால் திருவள்ளுவர் நகர் மக்களும் கூட இந்த பிரசார வேலையை நாடக மூலமாக செய்கிறார்களென்றால் மிகையாகாது.

திருவள்ளுவர் நகர் மக்களுக்கென்று தனியாக ஒரு புத்தக நிலையம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அவர்களும் பாதித் தொகை கொடுக்கச் சம்மதித்துள்ளனர். அதுவும் இன்னும் மூன்று மாதங்களில் நிறுவப்படும் என்பதில் ஐயமில்லை. மொத்தமாகக் கடந்த ஐந்து மாதங்களில் இவ் ஏழை மக்கள் கொடுத்த நன் கொடை சுமார் ரூ. 700 (பலதரப்பட்ட வேலைகளுக்கு) ஆகும். 102 கிராமங்களடங்கிய மண்டகொளத்தூர் வட்டாரத்தில் ஹரிஜனங்கள் வசிக்கும் சேரிகளுக்கு இந்த " வள்ளுவர் " நகர்தான் வழிகாட்டியாகவும், எடுத்துக் காட்டாகவும் உள்ளது.

முடிவுற்ற பொது வேலைகளைத் திரும்பிப் பார்த்தபோது எங்களுக்கே ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. அந்த சேரிமக்களின் நலன் இங்கு தான் புலப்படுகிறது. கண்ணாலும் காணப்படுகிறது. எது ? மறைந்து கிடந்த தமிழனின் தனிப்பெரும் பண்புகளான அன்பு, அறம், தியாகம். பொதுப் பணியில் எல்லோரையும் ஏற்றத் தாழ்விலாது உற்சாகத்தோடு உழைக்கச்செய்யும் தேசிய வளர்ச்சித் திட்டம் எங்களுக்கு நல்வழிகாட்டியது ; அரசாங்க ஊழியர்களிடம் எங்களுக்குப்பிரிக்க முடியாத பாசத்தை உண்டாக்கியுள்ளது இத் திட்டம் " என்னும் மக்கள் குரல் என் காதைத் துளைத்துக்கொண்டுதானிருக்கிறது.

ஸ்ரீபெரும்பூதூர் வட்டாரத்தில்

உடையவர் உற்சவத்தை முன்னிட்டு 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10உ முதல் 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17உ வரை விவசாய கால்நடை கண்காட்சி ஒன்று நடைபெற்றது. 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-உயன்று கால்நடை போட்டி ஒன்று நடைபெற்றது. போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த கால்நடைகளுக்கு சென்னை மாநில விவசாய அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. அன்று மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு விவசாயத்துறை இயக்குனர் ஸ்ரீ பி.பி. ஐ. வைத்தியநாதன் அவர்கள் தலைமை வகித்தார். அமைச்சர் அவர்கள் கிராமங்களில் கண்காட்சிகள் நடத்துவதன் அவசியத்தைப் பற்றியும் அவைகளின் மூலம் விவசாயிகள் எவ்வகையில் பயன் பெற முடியும் எனவும் கூறிப் புதியதாக பிராந்தியத்திற்கு வந்துள்ள தேசிய வளர்ச்சித் திட்டத்தை கிராம மக்கள் பயன் படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் கூறினார். விவசாயக் கண்காட்சி விவசாய அமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டு ஒருவாரம் நடந்தது. கண்காட்சியில் சுகாதாரம், கால்நடை, கூட்டுறவு, சமுதாய நலத்திட்டம் முதலிய இலாகாக்கள் கலந்து கொண்டன. ஜப்பானிய நெல் சாகுபடி முறையை விளக்கி மாதிரித் தளைகள் அமைத்து காட்டப்பட்டது. தேசிய வளர்ச்சித் திட்டத்தில் கிராமங்கள் பெறும் நன்மைகளை விளக்கி ஒரு மாதிரி கிராமம் அமைத்துக் காட்டப்பட்டது.

பிரதி தினமும் சமுதாய நலத்திட்டத்தைப்பற்றி படக் காட்சிகள் காட்டப்பட்டன. தினமும் ஆயிரக் கணக்கான விவசாயிகள் கண்காட்சிக்கு விஜயம் செய்தனர்.

வளத்தி வட்டாரத்தில்

தென்னார்க்காடு மாவட்டம் செஞ்சிவட்டம் வளத்தி தேசிய வளர்ச்சி திட்டத்தின் கீழ் கப்பளாம்பாடி விவசாய இளைஞர் கழகத்தின் தலைவர் ஸ்ரீ பூ. மன்னபெருமாள், செயலாளர் ஸ்ரீ. க. சு. ராமச்சந்திரன்—இவர்கள் இருவரின் விடா முயற்சியினால் சர்வே நெ. 43/1, 2 ஏக்கர் 98 சென்டு. ஓடை புறம்போக்கு சுமார் 10 சென்டு நிலத்தில் அமைக்கப்பெற்ற கோழிப் பண்ணையை தென்னார்க்காடு ஜில்லா கலெக்டர் அவர்கள் தலைமையில் கடந்த 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11உல் விவசாய அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம், பி.ஏ.,பி.எல்., அவர்கள் திறந்துவைத்தார்கள் ; மேலும் பஞ்சாயத்து சிறுவர் பூங்கா ஒன்றையும் திறந்துவைத்தார்கள். அமைச்சர் அவர்களிடம் சர்வே நெ. 140/6-பி, 23 ஏக்கர் 47 சென்டு புறம்போக்கு நிலத்தை கூட்டுறவு விவசாய பண்ணை நடத்தவும், சர்வே நெ.43/1, 2 ஏக்கர் 98 சென்டு புறம்போக்கு நிலத்தில் கூட்டுறவு முறையில் காலனியாக வீடு கட்டிக்கொள்ளவும், பட்டா செய்யும்படி வரவேற்பு மலரில் வாசித்து கொடுக்கப்பட்டது. அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாக உறுதி கூறினார்கள்.

திருவூரிலே கிராமத்தலைவர்கள் பயிற்சி முகாம்

[ஸ்ரீ P. சுப்ரமணியன், *திரூர் கிராம சேவக், திருவள்ளூர் வட்டாரம்.*]

சமுதாய நல திட்டத்தின் கீழ் திருவள்ளூர் வட்டாரத்தி லுள்ள கிராமங்களிலிருந்து 67 கிராமதலைவர்களுக்கு 1956-ம் ஆண்டு ஜனவரி மீ 22உ முதல் 24-ம் தேதிவரை பயிற்சி அளிக்கப்பட்டது. 'கொடி வளர கொழுக்கொம்பு தேவைப்படுவது போல' கிராம முன்னேற்றத்திற்கு இத் தகைய பயிற்சி முகாம் இன்றியமையாதது என்ற உண்மை 'உள்ளங்கை நெல்லிக்கனி போல' தெளிவுறத் தெரிந்தது.

இறைவணக்கம்

'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே யுலகு' என்றபடி கிராமத்தலைவர்களுக்கு காலையும் மாலை யும் கடவுள் வணக்கம் தரப்பட்டது. இந்து, கிருஸ்துவ, முகமதிய மத பாடல்களும், பண்களும் பண்புற பாடப் பட்டன. பல்வேறு இடங்களில் மேகங்களால் பொழியும் மாரிநீர் இறுதியில் கடலிலே இரண்டறக் கலப்பதைப் போன்று, எல்லா மத பாடல்களும், அவற்றின் கருத்துக் களும் 'ஒன்றே இறைவன்' என்பதனை போயடைகின்றன. இவ்வுண்மையை கிராமத்தலைவர்கள் அனைவரும் நன்கே புரிந்துகொண்டனர். நம் காந்தியடிகளின் கண்போன்ற பகவத்கீதையின் பொன்மொழிகளும் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் பதிந்திருந்தன. பஜனாவளி பாடல்கள் பாடும்போது பந்தலைத் துளைத்துக்கொண்டு பாடிய பெருங் குரல் ஓசை இறைவனின் காது செவிடு படும்படியான தாகவும் இருந்ததெனலாம். கிராமத்தலைவர்கள் மக்க ளிடையே பிரார்த்தனையின் முக்கியத்துவத்தையும் வழி படும் நல்ல முறையினையும் அதனுடைய இனியகருத்துக் களையும் தெளிவாக எடுத்தியம்ப இது ஓர் நல்ல பயிற்சி என்பதை யாரே மறுக்கவல்லார்?

சமூக வேலை

சமூகவேலை செய்வதற்காகக் கிராமத்தலைவர்கள் அத்தனைபேரும் அழகான பாட்டுகள் பாடிக்கொண்டே வேலைய மேற்கொண்டனர். ஆக்கவேலை கருவிகளே அவர்கள் கையிலே காட்சிதந்தன. அழிவுக்கருவிகளான அனைத்தும் பூண்டோடொழிந்தன, என்பதை செயலிலே நிரூபித்தார்கள். தொழில் இழிவென கருதும் இன்றைய 'அதிமேதாவிகளின்' அறிவுக்குச் சூடுதரும் வழியில் நெறியோடு தீரூர்சேரி கிராமத்திலே செய்த பாதையமைப்பு ஓர் சிறந்த எடுத்துகாட்டாக இருந்தது. ஒற்றுமையை வளர்க்க அவர்களின் செயல்களும், சேர்ந்து சென்று சிறப் பான முறையில் 'செய்வனத் திருந்த செய்' என்றபடி மேற்கொண்டு ஆற்றிய ஆற்றல் மிகு வேலைகளையும் நினைத்துக்கொண்டாலே, உள்ளம் உவகையில் அமிழ்ந்து விடுகின்றது; மனத்தில் பெய்யும் இன்பக்குளிர் மழை யால் உள்ளம் பண்பட்டுத் தூய்மையடைகின்றது! இந் நாள்போல் எந்நாளும் யாவரும் இன்புற்றிருக்க இறை வனைப் பிரார்த்திப்போமாக!

கூட்டுறவு மனப்பான்மையும் ஒற்றுமையுணர்வும் தலை வர்களிடமும், மக்களிடமும் பசுமரத்தாணிபோல பதியப் பெற்றது. பொதுப்பணிகளில் ஈடுபட்டதோடல்லாது, விவ சாய மேன்மைக்கு எடுத்துக்காட்டாக அவர்கள் வயலிலே செய்த வேலையைப் பார்த்தபோது—அவர்களோடு நானும் செய்தபோது—என்மனம் எவ்வளவு பெருமிதம் கொள் கிறது! ஜப்பானிய முறையில் சாகுபடி செய்வதன் மூலமாக மிக வருவாய் பெறலாம் என்பதை எண்ணி அவர்கள் வயலிலே—சேற்றிலே இறங்கி ஆனந்தம் பொங்கியெழ, அம்மயக்கத்தால் பாடல்களை உணர்ச்சியோடு இசைத்துக் கொண்டே அவர்கள் நாற்று நட்டதை நான் காணும் பெரும் பேறுபெற்றதே என் பாக்கியம்! வெற்றியே எம் இலட்சியம் என்று மார்பை நிமிர்த்தி வீரர்களைப்போல பயிற்சி முகாமிற்குத் திரும்பியபோது பாடிய அழகிய நல் கீதங்களிலே என்மனம் பறிபோயிற்று! 'தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சித் தன் மெய் வருத்தக் கூலி தரும்' என்ற வாய்மொழிச் செல்வன் வள்ளுவனின் வாக்கை அனுபவத்தில் கண்ட அவர்களின் அகமலர்ச் சிக்கும் முகமலர்ச்சிக்கும் இவ்வுலகத்தையே பரிசாக அளிப்பினும் போதாதெனத் தோன்றுகிறது.

கள்ளமிலா உள்ளமும், பண்பும், ஒழுக்கமும் ஒருவனுக்கு அணிகலன்களாக விளங்கவேண்டும்! அதை காட்டுமாறு போல தலைவர்களாம் அந் நல்லுள்ளங்கள் செய்த உள்துப்புரவு, கூட்டுதல், கழுவுதல், உணவுபடைத்தல் முதலியனபோன்ற அன்புச் செயல்களே அவர்களின் பண்பாட்டை விளக்கும்; சிறு புல்மீதுநின்ற பனிமழையில் மிகப்பெரு பனைதெரிதல் போல—

பொது அறிவு

கிராமதலைவர்களுக்கு பொது அறிவு ஏற்பட ஏதுவாக அறிஞர்கள் பலர் அவ்வப்போது வந்து அழகாகப் பேசி அவர்களுக்குச் செவிக்குணவு அளித்ததோடு மட்டுமல்லா மல் கருத்துக்கும் சிந்தனைக்கும் இடமளித்துச் சென்றார் கள்! மேலும் கிராமங்களில் உள்ள இன்னல்களை எப்படி சமாளிப்பது என்பதை மேற்போக்காகச் சொல்லிச் சென்றார்கள்!

நூற்பு

மாலையிலே நடத்திய நூற்பு வகுப்பிலே கிராமத்தலைவர்கள் அத்தனைபேரும் அமைதியோடு இருந்து நூற்றபோது எத்தனைதடவை பழுதுபட்டு அறுந்தாலும் விடாமுயற்சியுடன் நூற்றதை எண்ணியபோது சிலந்தியின் முயற்சியும், சிலந்தி செய்த முயற்சியின் வெற்றியால் நாடாளும் மன்னன் கற்ற பாடமும் நினைவிற்கு வருகின்றது! இவர்களது இனியசெயல்கள் வருங்கால உலகினை மாற்ற பெரிதும் பயன்படும் என்பது என் திண்ணமான நல்ல எண்ணம். தம் சுயதேவையை நிவர்த்தி செய்துகொள்ள தமக்குத் தாமே யாவினையும் செய்துகொள்ளவேண்டும் என்ற பேருண்மை வெள்ளிடை மலையென விளங்குகின்றது, இதையொரு மகத்தானப் புரட்சியென்றே கூறலாம்; இவர்கள் செய்த புரட்சி சிறிய அளவினதாக இருப்பினும் பரவாயில்லை! சிறுதுளிதானே பெருவெள்ளம்? சிற்றுளி மலையை ஆட்டிப்படைக்கவில்லையா? அடிமேல் அடி அடித்தால்தானே அம்மியும் அசையும்; இந்தமாதிரி உதாரணங்களை அடிப்படையாகக்கொண்டே இப்புரட்சி வளரும்! இம்மாதிரி கிராமநலத் தலைவர்கள் ஆங்காங்கு பணிபுரிவார்களாயின் நாட்டின் நிலை உயரும் என்பதில் ஐயமுளதோ?

கண்காட்சிகள்

அச்சாணி வண்டிக்கு எவ்வளவு முக்கியமோ, அதைப்போல உலகம் என்னும் தேருக்கு உழவு எனும் அச்சாணி மிகத்தேவை என்றால் மிகையாகாது. உழவுத்தொழில் சம்பந்தப்பட்ட பல தொழிற் கருவிகள் காட்சி சாலையிலே காட்சிதந்து கண்டோரை களிப்பிலாழ்த்தியதை எண்ணி மகிழாமல் இருக்க முடியவில்லை. கால்நடைகள் காட்சிகள் கண்டோர் கண்ணைக் கவர்ந்தன! ஒரு சில கால்நடைகள், பஞ்சத்தையும் நினைவுபடுத்தின; ஆயினும் ' கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது ' என்று சொல்வன போலும் பொலிவோடு பிராணிகள் நின்ற காட்சியினை மறக்க முடியாது; ' கல்லின்மேல் எழுத்தேபோல் ' என் மனத்தகத்தே அது பதிந்துவிட்டது! பயிரிடவேண்டிய முறைப்படி பயிரிடப் பலவித நன்மைகளையும் அங்கு யாவரும் கற்றனர். எல்லா செய்கைகளையும் காணும் போழ்து ' மயிர் கூச்செறிந்தது '.

விளையாட்டுப் போட்டி அவரவர் திறமையைக்காட்ட ஏதுவாக அமைந்ததோடு அல்லாமல் உற்சாகமாகவும் இருந்தது. மேலும், வாழ்க்கையும் இவ்வாறான போட்டிகளினூடேதானே செல்கின்றது? ஆகையால் விளையாட்டிலும்சரி, விளையாட்டுப்போன்ற வாழ்க்கையிலும்சரி எதிலும் விழிப்போடு இருக்கவேண்டும் என்பதை உணர்ந்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

மேலும் பொழுதுபோக்கிற்காக பஜனாவளி பாடல்களும், காலக்ஷேபங்களும் சிறப்புற நடைபெற்றன; கிராமமக்களின் குழந்தை மனத்திலும் தலைவர்களின சிந்தனையிலும் களிம்பும் கடமையும் அஜந்தா ஓவியங்களைப்போல பதியலாயிற்று!

இத்தகையதோர் கிராமத்தலைவர்கள் பயிற்சி முகாம் நடைபெறுவதின் வாயிலாக கிராமதலைவர்களின் உள்ளம் மிகப் பண்படுகிறது. தலைவர்கள் அடிச் சுவட்டைப் பின்பற்றும் பொதுமக்களும் பயன்பெறுவர் என்பதில் ஏதேனும் ஐயமா? கிராமங்கள் சீர்பெற பலதிட்டங்கள் தேவை; எல்லாதிட்டங்களையும் அரசாங்கமே நடத்திவிட முடியாது; பொதுஜன ஆதரவும் தேவை. அவ்வாதரவினைக் கிராமத்தலைவர்கள் தேடித் தருவார்கள் என்பது வெள்ளிடைமலை. திருஊரிலே பயிற்சிபெற்ற தலைவர்கள் கிராம முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு அரும் பலனைத் தேடித்தருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பசுந்தாள் பயிர்

வந்தவாசி ஸ்ரீ எச். ஏ. கான்.

" பிருந்தாவனமும் நந்தகுமாரனும் " என்ற இசை.

பசுந்தாள்பயிரும் பச்சையாம் தழையும்
பாரினிலே நல்ல உரமன்றோ—அது
பாரினிலே நல்ல உரமன்றோ
ஏனோ தோழா இதைவிடுகின்றாய்
யார்தான் நல்லதை விரும்பாதவரோ?
(பசுந்தாள்.)

நஞ்சைக்கும் போடு புஞ்சைக்கும் போடு
பலன் அதனாலே கிடைத்திடுமே
இவைகளை வாங்க எங்கும் போகாதே
வரப்பினிலே இது விளையாதா? (பசுந்தாள்.)

புஷ்பிக்கும் வேலையில் மடக்கியே உழுதால்
தண்டுமே மிருதுவாய் இருக்காதா?
ஏனோ தோழா இதை மறக்கின்றாய்,
யார்தான் நல்லதை விரும்பாதவரோ?
(பசுந்தாள்.)

உலகம் பலவிதம் !

பேரன் விளையாடச் செல்கிறான். தாத்தா மாலைப் பள்ளிக்குச் செல்கிறார் !



மாமியார் ராட்டையில் நூல் நூற்கிறாள் !.. மருமகள் தையல் இயந்திரத்தில் துணி தைக்கிறாள் !



குடும்பத் தலைவர்கள் கட்ட விரும்புவது மகப்பேறு நிலையம்



விவசாய மாதர் விரும்புவது சிறுவர் பூங்கா !



மிராசுதாரர் அம்மையப்பர் “ புதிய பாதை போடவேண்டாம் ” என்கிறார் ஏனெனில், அவர் நிலத்தில் சிறிய பகுதியை, அவர் பாதை அமைப்பதற்காக தானம் செய்யவேண்டுமே !

....ஊரார் கூடி புதியபாதை போட முன்வந்ததும், அம்மையப்பர் தாமே தலைமைவகித்து புதியபாதை அமைக்கும் வேலையை ஆரம்பித்து வைக்கிறார் !

செய்தித் திரட்டு

நூற்புப் போட்டிகள்

கீழ்பவானி சமுதாய நலத் திட்டத் தொழில் துறைப் பகுதியில் மேற்கொண்ட குடிசைத்தொழில்களிலும், சிறு தொழில்களிலும் கதர் தொழில் நல்ல இடம் பெற்றுள்ளது. பரவல் முறையில், இப் பகுதியில் ஆயிரம் ராட்டைகள் பொதுமக்களிடையே வழங்கப்பெற்று, மக்கள் நூற்றல் தொழிலில் ஆவல் கொள்ளத்தக்க சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே நூற்று வருவோர், மேலும் ஊக்கம் கொள்ளுதற்பொருட்டு ஏனையோரும் இதில் ஆர்வங்கொண்டு இனி இதனை மேற்கொள்ளுதற் பொருட்டும், இப் பகுதியைச் சார்ந்த நான்கு இடங்களில், அலுவலகத்தின் ஆதரவில் நூற்புப் போட்டிகள் நிகழ்த்தப் பெற்றன. இந் நான்கு இடங்களிலும், போட்டியில் நூற்போர் வெகுவாகக் கலந்துகொண்டதோடன்றி, பொது மக்களிற் பலரும் நல்ல ஆதரவுடன், திரளாக வந்து கலந்து கொண்டனர்.

பெருந்துறை

இவ்வூரில் 1956-ம் ஞு மேமீ 28உ காலை 10-30 மணி முதல் 11 மணி வரை மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் நூற்புப் போட்டி நடந்தது. போட்டியைத் திரு. M. J. சோமசுந்தரம், M.A. (கீழ் பவானி சமுதாய நலத் திட்டத் தொழில் துறைப் பகுதி அதிகாரி) அவர்கள் தொடங்கிவைத்தார். முப்பது பேர் போட்டியில் கலந்துகொண்டனர். மாலையில் கருமாண்டி செல்லி பாளையம் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. T. S. சிரங்க கவுண்டர் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. அக் கூட்டத்தில் திருமதி டாக்டர் சேது பாஸ்கரன், M.B.,B.S., ஈரோடு, அவர்கள் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். தோப்புப் பாளையம் கிராமத்தைச் சார்ந்த திருமதி பெரியம்மாள் முதற்பரிசாக இரண்டு இராட்டைகள் பெற்றார். இரண்டாம் பரிசான ஒரு ராட்டையைப் பெருந்துறை திருமதி நல்லம்மாள் பெற்றார். போட்டியில் கலந்துகொண்ட ஏனையவர்களுக்கும் பல சிறு பரிசுகள் பெருந்துறை இளைஞர் காங்கிரஸ் சங்கத்தாரால் அன்பளிப்பாக வழங்கப் பெற்றன.

காஞ்சிக்கோவில்

1956-ம் ஞு மேமீ 29உ, பாரத் சேவா சமாஜக் கட்டிடத்தில் காலை 11 மணி முதல் 11-30 மணி வரை நூற்புப் போட்டி நடந்தது. நூற்புப் போட்டியைத் திரு. M. J. சோமசுந்தரம், M.A. அவர்கள் ஓர் குத்து விளக்கை ஏற்றித் தொடங்கி வைத்தார்.

போட்டியில் கலந்து வெற்றி சூடியவர்க்குப் பரிசு வழங்குவதற்கென மாலை 4-30 மணிக்கு, காஞ்சிக் கோவில் பஞ்சாயத்து போர்டு தலைவர், திரு. K. P. முத்துச் சாமிக் கவுண்டர் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நிகழ்ந்தது. கவுந்தப்பாடி நாச்சம்மாள் முதற் பரிசும், சித்தோடு வடிவேலு இரண்டாம் பரிசும் பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு பெருந்துறை திரு. K. V. N. கவுண்டர் அவர்கள் பரிசு வழங்கினார்கள்.

கொளா நல்லி

1956-ம் ஞு மேமீ 30-ந் தேதியன்று கொளா நல்லி தொடக்கப் பள்ளியில் காலை 10-30 முதல் 11 மணி வரை நூற்புப் போட்டி நிகழ்ந்தது. போட்டியில் 20 பேர் பங்கெடுத்துக்கொண்டனர். அன்று மாலை 4-30 மணிக்கு திரு. K. S. செல்லக் குமாரசாமிக் கவுண்டர் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. அப்போது போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, நெடுநாளாய் கதர் சேவை ஆற்றிவரும் பெரியார் திரு. K. S. பெரியசாமிக் கவுண்டர் அவர்கள் மனைவியார், திருமதி பொங்கியம்மாள் பெரியசாமி அவர்கள் பரிசு வழங்கினார். போட்டியில் குட்டப் பாளையம் நல்லம்மாள் முதற் பரிசும், பணப்பாளையம் சின்னத் தம்பி இரண்டாம் பரிசும் பெற்றனர். போட்டியில் கலந்துகொண்ட ஏனையோர்க்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

நஞ்சக் கவுண்டம்பாளையம்.

1956-ம் ஞு ஜூன்மீ 5-ந் தேதியன்று சுஸ்தூரிபாய் நூற்புக் கழகத்தில் நூற்புப் போட்டி நிகழ்ந்தது. காலை 10-30 மணி முதல் 11 மணி வரை நூற்புப் போட்டி நடந்தது. 28 பேர் பங்கெடுத்துக்கொண்டனர்.

அப்போட்டியில், நஞ்சக் கவுண்டம் பாளையம் பாவாயாள் முதற் பரிசும், முருகையாள் இரண்டாம் பரிசும் பெற்றனர். வெற்றி பெற்றோர்க்கும், போட்டியில் கலந்துகொண்ட அனைவர்க்கும் பரிசுகளைத் திரு. பழனிக் கவுண்டர் அவர்கள் வழங்கினார்.

இது போன்ற போட்டிகள் ஒரு வருடத்தில் நான்கு நடத்த, அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கைத்தொழில் வளம்

பல்வேறு ராஜ்யங்களிலும் உள்ள சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருக்கும் 26 முன்னோட்டத் திட்டங்களுக்கு கிராம-சிறிய கைத்தொழில்கள் அபிவிருத்திக்கான தீவிர நடவடிக்கைத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. குடிசைத் தொழில்களில் விசேஷப்

பயிற்சிபெற்ற சமுதாய அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் இவைகளைப் பொறுப்பேற்று நடத்துவார்கள். அவர்கள் கதர், எண்ணெய் உற்பத்தி, கைக்குத்தல் அரிசி, தேனீ வளர்ப்பு, பனைவெல்லத்தயாரிப்பு, கைத் தயாரிப்புக் காகிதம், தீக்குச்சித்தொழில், தோல் தொழில், ஆகாரத்துக்கு உபயோகமில்லாத எண்ணெய்களைக்கொண்டு சோப் தயாரிப்பது, கோழி வகையரு வளர்ப்பு, கருமார் வேலை, தச்சு வேலை, நார்த்தொழில் முதலிய பல குடிசைத் தொழில்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரித்து வருகிறார்கள்

முன்னோட்டத் திட்டங்களுக்கான ஏற்பாடுகளை ஒரு நடவடிக்கைக் கமிட்டி கவனிக்கும். அந்தக் கமிட்டி சமுதாய அபிவிருத்தித் திட்ட நிர்வாக ஸ்தாபனத்தின் ஆதரவில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு மேற்படி ஸ்தாபன நிர்வாக அதிகாரி அக்கிராசனர் : சிறிய தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு அகில இந்திய போர்டுகளின் பிரதிநிதிகள், யூனியன் வர்த்தகத் தொழிலியல் அமைச்சர் அலுவலகம், உற்பத்தி அமைச்சர் அலுவலகம், சமுதாய அபிவிருத்தித் திட்ட நிர்வாக ஸ்தாபனம் முதலியவைகளின் பிரதிநிதிகள் அதன் அங்கத்தினர்கள். ராஜ்யங்களில் இதேபோல் நடவடிக்கைக் கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

26 முன்னோட்டத் திட்டங்களில், எட்டு திட்டங்களில் சிறிய தொழில்களுக்கான பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். அங்கே குறிப்பிட்ட சில சிறிய தொழில்களைத் தீவிரமாக அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி செய்யப்படும். இவை தவிர, வாகன ரீதியான எட்டுப் பிரிவுகள் இருக்கும். ஒவ்வொன்றிலும் மூன்று மோட்டார் வான்களும், ஒவ்வொரு வானிலும் ஒவ்வொரு தொழிலுக்கான சாதன வசதிகளும் இருக்கும். ஒன்றில் தச்சு வேலைக்கும், மற்றொன்றில் கருமார் வேலைக்கும், மூன்றாவதில் மேற்படி முன்னோட்டத் திட்டத்தில் நிறுவப்படப்போகிற தொழிலுக்கும் உரிய யந்திர சாதனங்கள் இருக்கும். இந்தப் பிரிவுகள் முன்னோட்டத் திட்ட ஸ்தலங்களுக்கு விஜயம் செய்து உயர்தர வேலை முறைகளில் பயிற்சியளிக்கும்.

தொழில் பேட்டைகள் ஒவ்வொன்றுக்கும் 10–15 லட்ச ரூபாய் செலவாகும். அத் திட்டங்கள் வர்த்தக-தொழிலியல் அமைச்சர் அலுவலகத்தால் வகுக்கப்பட்டுள்ள பெரிய திட்டத்தின் அங்கமாக இருக்கும். மேற்படி அலுவலகம் பரிசோதனார்த்த ரீதியில் 45 வாகன ரீதியான பட்டறைகளை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பிட்ட சில சமுதாய அபிவிருத்தித் திட்டங்களிலும், முக்கியமாக முன்னோட்டத் திட்டப்பகுதிகளிலும் பிரயாணம் செய்து தீவிர நடவடிக்கை யெடுப்பதற்காக அவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

கலசபாக்கம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஞு ஜூன் மாதத்தில், சினிமாப்படங்கள் பல திரையிடப்பட்டன. டல பள்ளிகளுக்கு, திட்ட அதிகாரிகள் விஜயம் செய்தனர். பல பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஞு மே மாதத்தில் மணலி விளாக்குடி ரஸ்தாவில் கப்பி அடிக்கும் வேலை பூர்த்தி செய்யப்பட்டது. சூரமங்கலம், பணங்காடி முதலிய கிராமங்களில், கிராம மக்களே முன் வந்து மூன்று பர்லாங்கு நீளத்துக்கு பாதை அமைத்தார்கள். அறுபது சேரிகள் துப்புரவு செய்யப்பட்டன. கனிதரும் மரக் கன்றுகள் 408-ம் இதர மரக்கன்றுகள் 70-ம் நடப்பட்டன. நான்கு குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன. 180 மூட்டை பொறுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டன. 1,310 கால்நடைப் பிராணிகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், 105 கால்நடைப் பிராணிகளுக்கு சப்பை நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. 203 கோழி, வாத்து இனங்களுக்கும் நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. உம்பளச்சேரி கூட்டுறவு நாணய சங்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்துவிட்டது. 231 சிட்டம் கதர் நூல் உற்பத்தி செய்யப்பட்டது. சுமார் 141 ரூபாய் பெறுமான கதர் நூலும் சுமார் 37 ரூபாய் பெறுமான சர்க்காக்களும் விற்கப்பட்டன.

திருவண்ணாமலை வட்டாரத்தில்

ஐந்தாண்டுத்திட்ட பிரசார வாரம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பிரசார வாரத்தின் இரண்டாவது தினத்தன்று, கருந்துவம்பாடி கிராம மக்களால் அமைக்கப்பட்ட பாதை ஒன்று திறக்கப்பட்டது. மாலையில் நடந்த பொதுக் கூட்டத்தில் டாக்டர் பி. ஏ. சொக்கலிங்கம், ஸ்ரீ நாராயணசாமி ஐயர், ஸ்ரீ பி. டி. சிரோமணி, ஸ்ரீ டி. வி. தேவராஜ முதலியார், எம். எல். ஷி , ஸ்ரீ சி. ரங்காச்சாரி, ஸ்ரீ நாராயணசாமி முதலியார், ஸ்ரீ சீதாபதி ரெட்டியார், ஸ்ரீ சேஷாசலம் ஐயர் முதலானோர் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி விவரித்துக்கூறி, கிராம மக்கள் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தை நிறைவேற்ற உற்சாகத்துடன் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். சொற்பொழிவு, சங்கீத போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஞு மே மாதத்தில் 116 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டன. 830 பவுண்டு பொறுக்கு விதைகளும், சீர்திருந்திய விவசாயக் கருவிகள் 50-ம் விநியோகிக்கப்பட்டன. 40 ஏக்கர் தரிசு நிலம் சாகுபடிக்குகந்த வகையில் பண்படுத்தப்பட்டது. மேலும் 20 ஏக்கர் நிலத்தில், பசுந்தாளுரச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. மூன்று இளைஞர் மன்றங்களுக்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்குவதற்கென, மொத்தம் ரூ. 85 வசூலிக்கப்பட்டது. ரூ. 68–10–3 பெறுமான கதர் விற்கப்பட்டது. ஐந்து நாட்டு செக்குகள் வார்தா செக்குகளாக மாற்றப்பட்டன. வடலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள பிரசவ மருத்துவ உதவியாளர், 6 பிரசவ கேசுகளைக் கவனித்தார்.

கோயமுத்தூர் ஜில்லாவில்

இந்த ஜில்லாவிலுள்ள குண்டடம் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மே மாதத்தில், கிராம விதைப் பண்ணை, தேனீ வளர்த்தல், கம்போஸ்ட் உரம் தயாரித்தல் முதலியவை பற்றி பிரசாரம் செய்யப்பட்டது. C.O. 3 கம்பு விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. திருப்பூர் வட்டாரத்தில், 18 ஏக்கர் நிலத்தில், மண்வள பாதுகாப்புக்காக, வரப்பு கட்டப்பட்டது. காங்கேய வட்டாரத்திலுள்ள பாடியூர், தேவணம்பாளையம், நாராயநாய்க்கன் புதூர் ஆகிய ஊர்களில், உரம் போடுவது பற்றி விளக்க, நிதர்சன பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன. பல்லடம் வட்டாரத்தில், 75 ஏக்கர் நிலம் இயந்திர கலப்பையால் உழப்பட்டது. புல்டோசர் மூலம் 35 ஏக்கர் மட்டப்படுத்தி பண்படுத்தப்பட்டது.

குண்டடம் வட்டாரத்திலே, இனத்தரமிகுந்த கோழி முட்டைகள் 300 விநியோகிக்கப்பட்டன. திருப்பூர் வட்டாரத்தில், 570 மாடுகளுக்கு நோய் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. பல்லடம் வட்டாரத்தில், 303 கோழி, வாத்துகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. செஞ்சேரி, மலையடிபாளையம், குரும்பா பாளையம் முதலிய ஊர்களில், மாற்றுத் திட்டத்தின் கீழ், இனத் தர மிகுந்த சேவல்கள் 17 விநியோகிக்கப் பட்டன.

குண்டடம் வட்டாரத்தில் பொன்னுபுரம், கள்ளி வலசு, நத்தம் பாளையம் முதலிய ஊர்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. திருப்பூர் வட்டாரத்திலுள்ள அனுப்பார் பாளையத்தில் பித்தளைத் தொழில் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. காங்கேய வட்டாரத்தில், கண் மலையாம் பட்டியில், தோல் சாமான்கள் தயாரிப்பதற்கென கிராமத் தொழில் கூட்டுறவு சங்கமொன்று அமைக்கப்பட்டது. மந்திரி பாளையத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது.

குண்டடம் வட்டாரத்திலுள்ள குப்பிச்சி பாளையத்தில் மக்கள் மனமகிழ் மன்றம் ஒன்று திறக்கப்பட்டது. போஷாக்குக் குறைவான குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும் வைடமின் மாத்திரைகள் விநியோகிக்கப்பட்டன. திருப்பூர் வட்டாரத்தில், இரு முதியோர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. கந்தப்ப கவுண்டன் புதூரில், மாதர் சங்கம் அமைக்கப்பட்டது. காங்கேய வட்டாரத்திலுள்ள தேவணம் பாளையத்திலும், வீரசோள புரத்திலும் சிரமதான இயக்கம் தீவிரமாக நடைபெற்றது. பல்லடம் வட்டாரத்தில், சேரிகளில் வாழும் மாதர்களுக்கு சர்க்காக்கள் விநியோகிக்கப்பட்டன.

திருப்பூர் வட்டாரத்திலிருக்கும் இருவாய் தேவம்பாளையத்திலும், அனுப்பார் பாளையத்திலும் குளிப்பதற்கான அறைகள் கட்டி முடிக்கப்பட்டன.

அறிவிப்பு

"கிராம நலம்" பத்திரிகையின் விளம்பர விகிதம்

வெளி அட்டைப் பக்கம் ..	ரூ. 150– 0– 0
உள் அட்டைப் பக்கம் ..	ரூ. 125– 0– 0

இதர பக்கங்களில் :

பக்கம் ஒன்றுக்கு	ரூ. 100– 0– 0
அரைப் பக்கம்	ரூ. 60– 0– 0

சந்தா விவரம்

வருட சந்தா	ரூ. 1– 8– 0
ஆறு மாத சந்தா	ரூ. 0–12– 0

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பலாம்.

தனிப் பிரதி—இரண்டு அணு

தனிப் பிரதிகளை அனுப்ப, தபால் பில்லைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மற்ற விவரங்களுக்கு, பின்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள் :

**பொதுஜனத் தொடர்பு அதிகாரி,
(சமுதாய அபிவிருத்தி),
செக்ரடேரியட்,
சென்னை-9.**

**Public Relations Officer,
(Community Development),
Public (R.D.P.) Dept.,
Secretariat,
Madras-9.**

இப் பத்திரிகை, சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி இலாகாவால் நடத்தப்படுகிறது. ஆயினும், இதில் வெளியிடப்படும் அபிப்பிராயங்களும், காணப்படும் கருத்துக்களும், சென்னை அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அபிப்பிராயங்களை வெளியிடுகின்றன என்பதில்லை.

இப் பத்திரிகையில் வெளியிடும் பாட்டு, கதை, நாடகம் முதலியவற்றில் வரும் பெயர்கள் யாவையும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல.

முன்னேற்றப் பாதையிலே

ஸ்ரீ கே. ஏ. சீனிவாசன், கிராம சேவக், குண்டடம்.

[குண்டடம் வட்டாரத்திலுள்ள முத்துக்கவுண்டன் பாளையத்திற்கு, வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் சென்று, அபிவிருத்தி வேலைகளைப்பற்றி கிராம மக்களுக்கு எடுத்துக்கூறி, அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று, பல அரிய சாதனைகளைப் புரிந்துள்ளனர். அந்த கிராம மக்களின் மனம் எவ்வாறு மாறியது ? அவர்களுடைய ஒத்துழைப்பு எவ்விதம் கிடைத்தது ? ஆகிய கேள்விகளுக்குரிய பதில்களை இக்கட்டுரையில் காணலாம்.

—ஆசிரியர்]

மனிதன் மட்டுமல்ல, எல்லா உயிர்களுமே, தங்களுக்குக் கிடைப்பதைவிட அதிகமாக சிலவற்றைப் பெற்று நன்றாய் வாழ ஆசைப்படுகின்றன. அந்த நல்ல ஆசையிலிருந்துதான் உலக முன்னேற்றம் முழுவதுமே ஏற்பட்டிருக்கிறது. அதை நல்ல முறையிலே தூண்டக் கருவியொன்று தேவைப்படுகிறது.

நாட்டு முன்னேற்றத்திற்குத் தீட்டப்பட்ட பல திட்டங்கள் மக்களின் " முன்னேற வேண்டும் " என்ற எண்ணத்திற்கு எண்ணெயும் திரியுமாக விளங்குகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக அமையும் எங்கள் வட்டார அபிவிருத்தியில் உள்ள ஒரு கிராமத்தை உங்கள் முன் நிறுத்துகிறேன்.

எங்கள் வட்டாரத்தின் பெயர் குண்டடம்—பெயர் மட்டுமல்ல, இங்குள்ள பாதை, மக்கள் உள்ளங்கள், இவையனைத்துமே கரடுமுரடானவை. மக்கள்வாழ் நிலத்திற்கேற்ப தன்மையும் இருக்கும் என்பதற்குச் சான்று இதுவே என்பது எனது எண்ணம். இங்குள்ள மக்கள் மறைந்து கிடந்த தங்கள் சக்தியை அறியா திருந்ததுதான் இதற்குக் காரணம் என்பது பின்பு புரியவந்தது. முன்னேற்றப் பாதையிலே தன்னலம் கருதாது அன்பும், ஆர்வமும் பின்னப்பட்ட உள்ளத்தோடு ஏறு நடைபோடும் மக்கள் வாழ் முத்துக்கவுண்டன்பாளையம் பக்கம் சிறிது உங்களை அழைக்கிறேன்.

தாராபுரத்தினின்று பல்லடம் செல்லும் பாதையிலே, இவ்வட்டாரத் தலைமையிடமான குண்டடத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் நின்று பார்த்தால் சுற்றுப்புறமும் சூழ்நிலையும் இயற்கையின் விந்தையைத்தான் எண்ணத்தூண்டும். நாற்புறமும் வரட்சியாக விருப்பினும், வெள்வேல் மரங்களின் அற்புதக் காட்சி ஆங்காங்கு தெரியும். இவற்றினூடே தவழ்ந்துவரும் அனற்காற்று, உடைந்த உள்ளத்தவனின் உஷ்ணப்பெருமூச்சை நினைவூட்டும்.

நானும் எங்களது வட்டார அபிவிருத்தி அதிகாரியும் கிராமங்களின் தேவைகளைக் காணப் புறப்பட்டு, மேற்கூறிய இடத்தை அடைந்தோம். அங்கிருந்து மேற்கே இரண்டு மைல் தொலைவில் தான் முத்துக்கவுண்டன்பாளையம். ஜீப் ஆடி, அசைந்து (புழுதியையும் கிளப்பிக் கொண்டு தான் !) சென்றது. இரண்டு மைல்களும் கடந்தது. கண்டோம் முத்துக்கவுண்டன்பாளையத்தை ! ...... ஆம் .... காணத்தான் முடிந்தது. செல்ல முடியவில்லை. காரணம் பெருத்த உறுமலுடன் ஜீப் நின்று விட்டது. புதிய ஜீப் ஆயிற்றே, இதில் என்ன தகராறு என்று சந்தேகிக்க, பாதை பழங்காலத்தது, என்னை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது, என்னால் நகரமுடியவில்லை யென்று, ஜீப், சக்கரங்களைச் சுற்றிக் கொண்டு பதில் கூறியது. இதற்குள் சத்தம் கேட்டு அவ்வூர் மக்கள் திரண்டு விட்டனர் ; காரைச் சுற்றி சிறுவர் தொகை அதிகம் என்று கூறவேண்டியதில்லை.

பட்டணத்துப் பக்கமென்றால் ஜுய்......ஹாய்...... என்ற ஏளன இரைச்சலும், எங்கள் வாகனத்தைப் பற்றிய விமர்சனமும் உடனடியாகத் தொடங்கி விடும். ஆனால் இது கிராமம். மக்களின் மகத்தான உழைப்பு எங்களை ஊரினுள் வரவேற்கவே முதலில் பயன்பட்டது. பாதையிலே படர்ந்திருந்த கள்ளி கற்றாழை அகற்ற ஒரு கூட்டம், ஜீப்பைப் பின்தள்ளி மண்ணை வாரியிறைக்கும் சக்கரங்கட்கு அணையாக கற்களைப்போட ஒரு கூட்டம். நாங்கள் யார்? எதற்கு ? எங்கிருந்து வந்திருக்கிறோம் என்பதை அறிய ஒரு கூட்டம், இப்படியே எங்களைச்சுற்றி ஏக ஒளிமுகங்கள் கூட்டமாகப் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டன. எங்களது உள்ளத்திலும் நம்பிக்கை ஒளி படர்ந்தது. ஒருவாறு நகர்ந்தது வாகனம். ஊர்ப் பொது இடத்திலே, அமர்ந்து முதலிலே இந்தப் பாதையைப் போடும் பிரச்னையைக் கிளப்பினோம்.

அந்தப் பாதையோர நிலங்கள் பலருக்குச் சொந்தமாக இருந்தன. அவர்களில் முக்கியமானவர் கருப்பண்ண கவுண்டர். பாதையை அகலப்படுத்த அவருட்பட எல்லோருடைய கொடைத்திறனும் தேவைப்பட்டது. அத்தோடு வேறு பிரச்னை நோக்கிச் செல்ல முயன்ற எங்கட்கு பெரிய ஏமாற்றம் காத்திருந்தது. காரணம் நமது கருப்பண்ண கவுண்டர்தான்....அவர் முக்கியஸ்தர் என்பதால் அல்ல,

அவரது நிலத்தின் ஒரு பகுதி தேவைப்படுகிறது என்பதாலும் அல்ல, அவ்வளவு கூட்டத்திலே எங்களது தன்னலத்தை வெட்ட வெளிச்சமாக்கி விட்டார்!

அவர்.—"ஆமா....இவுங்க காரு இங்கே சரியா வரமுடியல்லேங்கறதுக்கு, இருக்கிறவன் நிலத்திலே ரோடு போடணுமாக்கும்" என்ருர். (எப்படியிருக்கிறது அவரது கேள்வி. எங்கள் வட்டார அபிவிருத்தி அதிகாரி அவரையழைத்து விபரம் கூறினுர்.)

அதிகாரி.—ரோடு போடுவது, எங்களுக்கல்ல, ஊருக்குத்தான். அதிலே எல்லோருடைய வண்டியும் தாராளமாகப் போக வசதி இருக்கிறது. பொதுக் காரியத்தை முன்னின்று செய்வதுதான் முறை.

கருப்பண்ண கவுண்டர்.—எனக்கொண்ணும் இதிலே வண்டி வாசி போகனுங்கற அவசிய மில்லேங்க. இத்தனே நாளா இந்த ஊரிலே இருக்கிற நாங்க தெரிஞ்சுக்காததை, இன்னிக்கு வந்த நீங்க என்னத்தை தெரிஞ்சு சொல்லப் போறீங்க.

அதிகாரி.—உங்களுக்குத் தெரியாததை நாங்கள் சொல்ல வரவில்லே. தெரிந்தும், அதன்படி நடக்காததை ஞாபகப் படுத்தவும், எங்களுக்குத் தெரியாத பல விஷயங்களே உங்களிடமிருந்து தெரிந்து போகவும்தான் வந்திருக்கிறேம்.

கரு.—அப்படின்னு........உங்க சர்க்கார் செய்துட்டுப் போன தகராறுகளேயே தெரிஞ்சுகிட்டுப் போங்க, அடேயப்பா....அவங்க வெறட்டற வெருட்டும், உருட்டற உருட்டும்......

அதிகாரி.—அப்படியல்ல பெரியவரே......இது நம்ம சர்க்கார். நாங்களெல்லாம் உங்களுக்காக வேலே செய்ய வந்திருக்கிறேம். விரட்ட வரவில்லே.

கரு.—நீங்க என்னமோ நினேச்சிட்டீங்க, இந்தக் கிராமத்தை ஒண்ணும் அசைக்க முடியாதுங்க......(அவரது குரலில் அபரிமிதமான உறுதி தொனித்தது.) (நாங்கள் புரியாமல் விழிக்க அவர்மேலும் தொடர்ந்தார்.) ஆமாங்க அன்னிக்கு வந்த அதிகாரி அந்த நெனப்பிலேதான் பேசினுர். 'கம்பி எண்ண வச்சுடுவேன்னு' சொன்னுருங்க. இப்பவும் ஹை கோர்ட் வரைக்கும் பாத்திடுவேன். ஒண்ணும் நடக்கலிங்க.

மற்றவர்.—இந்த ஊரிலே ரோட்டையும் போட முடியாது.. பள்ளிக் கூடமும் கட்டமுடியாது. இது இன்னிக்கு நேத்தைய பேச்சுங்களா......இந்தப் பத்து வருசமா இந்தத் தகராறுதானே.

அதிகாரி.—இதென்ன......நல்ல காரியத்தைத் தடை செய்ய இவ்வளவு உறுதியாக இருக்கறீங்களே. நாங்க யாருக்காக ரோடு போடனும், பள்ளிக்கூடம் கட்டனும் எல்லாம் உங்க நன்மைக்குத்தானே—உங்க பிள்ளேகள் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தானே.

வேறெருவர்.—எனக்கு ஒரே மகன். அவனுக்கும் வயசு முப்பதாயிட்டுது. எங்கள் வீட்டில் படிக்க யாருமே இல்லேயே.

அதிகாரி.—உங்களுக்கு பேரக்குழந்தை பிறக்காது என்று நீங்கள் எப்படி அதற்குள் முடிவுகட்ட முடியும்?

(எல்லோரும் சிரிக்கிருர்கள்.)

கரு.—எது எப்படியானுலும் நான் இடந்தர மாட்டேன்.

அதிகாரி.—அது மாதிரியல்ல........நாங்கள் உங்கள் ஊரார் சார்பிலே உங்களேக் கேட்டுக் கொள்கிறேம். எல்லாம் உங்களது நலத்திற்குத்தான். தேசிய வளர்ச்சித் திட்டத்திலே அதட்டலுடன் கூடிய அதிகாரம் கிடையாது. அன்பு உண்டு. மிரட்டலும் உருட்டலு மில்லே. உதவியும் ஊக்கமும் உண்டு. இத்திட்டம் ஒரு காமதேனு. நல்ல முறையில் பயன்படுத்தினுல் சிறந்த பலன்களே அடைய முடியும். எல்லோரும் ஒத்துழைத்தால் இத்திட்டத்தைப் பயன்படுத்தி ஊரை முன்னுக்குக் கொண்டு வரமுடியும். சண்டையும் சச்சரவும் மிகுந்தால் நமது ஊருக்குத்தான் நஷ்டமே யொழிய சர்க்காருக்கல்ல. உங்கள் காலத்தில் இவ்வளவு நன்மையும் உங்களால் நடந்தது என்ருல் அது இந்த ஊர் உள்ளவரை நிலேத்திருக்கும். நீங்கள் கட்சி மனப்பான்மையை மறந்து விட்டு சகோதர மக்களுக்கு நன்மை செய்யும் எண்ணத்தைக் கொண்டே இதை முடிவு செய்யுங்கள்.

என இவ்வாறு எங்கள் வட்டார அபிவிருத்தி அதிகாரி உருக்கமானதொரு பிரசங்கமே செய்துவிட்டார். பழங்காலத்துப் போர்க்கள வரலாற்றிலே, அரசன் தனது தளர்ந்த படைகளுக்கு நேரில் சென்று ஊக்கமும், உற்சாகமும் ஊட்டி, போரிலே வெற்றி பெற்றது படித்திருக்கிறேம். ஆனுல் இன்றுதான் பேச்சுக்குரிய சக்தியை வலிமையை நேரில் காணமுடிந்தது. அவ்வளவு எதிர்ப்புக்கூறிய ஸ்ரீ கவுண்டரே மனம் மாறிவிட்டார் என்ருல் அதன் அருமை பெருமையை கிராமங்களிலே நமது கருப்பண்ண கவுண்டர் போன்றவர்களிடம் அனுபவப்பட்டவர்கட்குத்தான் நன்கு தெரியமுடியும்.

கருப்பண்ண கவுண்டர் பார்வைக்கு கரடு முரடானவர். முதலில் கிலி பிடித்த மனிதனுல் தட்டி எழுப்பிய புலி போல பாய்ந்தார். பின்பு அமைதி தவழும் அன்பு மலேயாக மாறிவிட்டார். கேட்டதற்கும் மேலாகத் தம் பூமியையும், அதற்கும் உயர்வான அவரது பூரண ஒத்துழைப்பையும் தர முன்வந்தது எல்லோருக்கும் வியப்பையளித்தது. மேலும், அவரே இந்த ரோடு போடுவதை ஏற்றுச் செய்வதாக உறுதி கொடுத்தது எல்லோருக்கும் பெரிய ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் ஊட்டியது. இவ் வட்டார தேசிய வளர்ச்சித் திட்டத்தின் வெற்றி நிழல் படிந்தது எமக்குத் தெரிந்தது.

"அடுத்தபடியாக" என்று ஆரம்பிக்கையிலேயே பல குரல்கள் தன்னிச்சையாக ஒலிக்கத் தொடங்கின.

"இந்த ஊருக்குப் பள்ளிக்கூடம் அவசியம் கட்டணும்." "ஆமா........இந்த கொளத்தை இன்னும் கொஞ்சம் வெட்டிப் போடணும்ஞ......". "ஆமா,......ஆமா.... தண்ணிதானே முதல்லே தேவை" என்று இதை மற்றொரு குரல் ஆமோதித்தது. இவைகளை வரிசைப்பட எடுத்துக்கூற ஒருவர் முன்வந்தார். நாங்களும் பல குரல்களிலே கேட்பதைவிட ஒருவர் மூலம் விபரத்தை நன்கு அறிய விரும்பினோம். அதற்குமுன் விபரம் கூறவந்த ஸ்ரீ சுப்பய்ய செட்டியாரைப் பற்றி ஒரு வார்த்தை. அவர் இந்த ஊரிலேயே விஷயஞானம் பெற்றவர். பிறர் நலம் பேணும் தன்னல எதிரி. அவர் பள்ளியை எடுத்துக்கட்ட முன்வந்தார். இன்னும் தேவையான மற்ற வேலைகளையும் எடுத்துச் செய்து ஊரை முன்னேற்றுவிக்க உறுதியளித்தவர். அவர் தந்த உறுதிவிளக்கின் நம்பிக்கை ஒளியிலே வெளியே வந்தோம்.

என்ன ஆச்சரியம்......!. எங்கள் ஜீப்பைக் காணோம்! அதற்கு பதில் பெரிய ஜனத்திரள் காத்திருந்தது. வியப்பு மேலிட அதை நோக்கி நடக்கையிலே ஜீப்பின் ஊதுகுழல் பரிதாபமாக அலறியது. அதைத் தொடர்ந்து 'ஹோ' என்ற இரைச்சல்— இல்லையில்லை—மகிழ்ச்சியின் எதிரொலி.

"மோட்டார் காருபோய்!......"

"இல்லையில்லே, சீப் மோட்டார்!!" இதற்குள் இன்னொரு பொடியன் அதிலிருந்து வந்த சத்தத்தை அப்படியே 'ஒலிப் பதிவு' செய்தது போல எடுத்து விளக்கிக் கொண்டிருந்தான். மற்றவன், காரு வந்ததும், கரட்டுப்பள்ளத்தில் சிக்கியதையும் கதைபோல 'அபிநயத்தோடு' கலந்த பேச்சிலே கூறி எல்லோரையும் தன்பக்கம் கவரமுயன்று கொண்டிருந்தான். இவையனைத்தும் ஜீப்பைச் சுற்றித்தான். ஒரு வழியாகக் கூட்டம் விலக, நாங்கள் மறுமுறை வருவதாகக் கூறி விடை பெற்றுக்கொண்டு கிளம்பினோம். (எல்லை வரை பெரும்படை பின்தொடரத்தான்!......)

இதற்குப்பின் இரண்டாவது நாள். இருளின் கோரப் பிடியிலிருந்து விடுபட்ட மகிழ்ச்சியிலே துள்ளி உருண்டோடி வந்தது உதய சூரியன். அலுவலகம் நோக்கி வந்தேன். முதலிலே கண்டது, காத்திருந்த நம் சுப்பய்ய செட்டியாரின் புன் சிரிப்பு முகத்தைத்தான். பள்ளிக் கட்டிட விஷயமாகக் காண வந்திருந்தார். பள்ளியின் எஸ்டிமேட் தொகை ரூ. 9,000. இதிலே மக்கள் பங்கு ரூ. 5,000. அன்றே வேலை தொடங்க எங்கள் இன்ஜினீயருடன் கிளம்பினோம். போகும்போதே ஊர் அணுகியதும் டிரைவர் தன்னைத் தயார் செய்துகொள்ள முயன்றார். ஆனால் அதுபடி எதும் இத்தடவை நேரவில்லை. பழைய இடங்களெல்லாம் புது மண் போட்டு மேடாக்கி, பாதையின் உருவத்தை அடைந்திருந்தது. இது இவ்வூர் இளைஞர்களின் பெருமுயற்சி. இந்த இளைஞர்களின் சமூக உணர்ச்சியைப் பயன்படுத்திப் பாராட்டவேண்டும் என்று என்னுள்ளம் விழைந்தது. "கிராமிய கலாசார நாள்" ஒன்று கொண்டாட நாள் குறித்து வந்தேன்.

ஜனவரி பனிரெண்டாம் நாள் புலர்ந்தது. முத்துகவுண்டன்பாளையம் கோலாகலமாகக் காட்சியளிக்க இளைஞர் சமூக சேவா சங்கத்தில் வேலை துரிதப்பட்டது. அதன் பிரதிபலிப்பே எங்கு கண்டாலும் ஜொலிக்க ஆரம்பித்தது. வீதிகள் சுத்தம் செய்தல், மேடை அரங்க அமைப்பு, சுற்றுப்புற சுத்தம் ஆகியவை அவர்களின் குறிப்பான வேலைகளுள் சிறப்பானவை. பழங்கால கிராமிய மெட்டுகளிலே அமைக்கப்பட்ட இசையுடன், கிராம கலாசாரம் பற்றிய ஓர் ஓரங்க நாடகமும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. மாலை மணி ஐந்தாகியது. மைதானம் நிறைந்துவிட்டது. கூட்டத்திற்கு, ஈரோடு ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் ஸ்ரீ S. M. காளிதாஸ் நாயுடு அவர்கள் தலைமை தாங்கினார். இந்தத் தொகுதி (M.L.A.) எம்.எல்.ஏ. ஸ்ரீ ஏ. சேனாபதி கவுண்டர் அவர்கள், எங்கள் வட்டார அபிவிருத்தி அதிகாரி ஸ்ரீ C. முத்துசாமி கவுண்டர் மற்றும் வளர்ச்சித் திட்ட அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டனர். திட்டத்தின் நோக்கம் பற்றியும், ஊக்கமிக்க இளைஞர்கள் ஆக்க வேலையிலே ஈடுபட்டு ஏக்க முற்ற உள்ளங்களின் எழுச்சிக்குப் பாடுபட வேண்டும் என்றும் விரிவாக எடுத்துரைத்தனர். காணக்கிடைக்காத கலா நிகழ்ச்சியுடன் கூட்டம் இனிது முடிவடைந்தது. அன்றைய முத்துக்கவுண்டன்பாளையம் இன்னும் என் கண்முன்னே காட்சியளிக்கிறது.

இப்போதெல்லாம் எங்கள் ஜீப் புதுரோட்டிலே துள்ளிப் பாய்ந்து செல்கிறது. ஆனால் அதிலும் சில சங்கடங்கள் இருக்கத்தான் செய்கிறது. மழை காலத்தே பாதையை அரிக்கும் வெள்ளத்துடன் சமாதான உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்தது. அதையும் உடனடியாகச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இப்புது ரோட்டிலே ஓர் நடை பாலமும் (கல்வெர்ட்), ஒரு பாதை அணையும் (ரோட் டேம்) கட்டப்படுகிறது. கல்வெர்ட்டின் எஸ்டிமேட் ரூ. 440. இதில் மக்கள் பங்கு ரூ. 220. பாதை அணையின் எஸ்டிமேட் தொகை ரூ. 270. இதிலே மக்கள் பங்கு ரூ. 135.

பள்ளிக் கட்டிடம் உயர உயர, மக்கள் உள்ளமும் உயர்வு காணுகிறது. தற்போது அது கதவு ஜன்னல் வைக்கப்பெற்று மேல் வேலை மிகத் துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. பள்ளியின் முன்னேற்றத்திலே தண்ணீரின் தேவையும், பெருமையும் மறந்து விடவில்லை. கிணற்றை ஆழப்படுத்தும் வேலையும் ஏககாலத்தே தொடங்கப்பெற்று நடந்து வருகிறது. கிணறு வெட்டப்படுகிறது என்பதுடன் அதன் அருகே ஓர் குளியலறையும் (பாத் ரூம்) கட்டி முடிந்து விட்டது என்று சொல்ல நான் பெருமைப்படுகிறேன். இது வெகு விரைவிலே முடிந்த ஓர் சாதனை. இதன் எஸ்டிமேட் தொகை ரூ. 340. மக்கள் பங்கு ரூ. 85. இவ்வாறு பல வேலைகள் சேர்ந்தாற்போல் தொடங்கி வெற்றிகரமாக முடிந்து வருவதற்குக் காரணமாக விருப்பது மக்களின் ஒற்றுமையும், கட்டுப்பாடும், ஓயா உழைப்பும், வீழா உறுதியும், சமுதாய உணர்வும், அமுதான அன்பும்தான்.

மனிதன் முன்னேற்றத்திற்கு சிந்தனை மிக முக்கியம். புத்தகங்கள் சிந்தனையின் குழந்தைகள். வாழ்க்கை வானத்திலே ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சுவது அறிவு என்னும் ஞாயிறு. அந்த ஞாயிறு இல்லையேல் வாழ்வு இன்பமிலா இருள் நிலையிலேதான் இருக்கமுடியும். மற்ற எல்லாவற்றையும் உருவாக்கி ஒழுங்கு படுத்தும் அறிவை உருவாக்கி ஒழுங்கு படுத்துவது நம் கடமை. இந்தக் கடமையிலும் நம் முத்துக்கவுண்டன்பாளையம் தவறி விடவில்லை. அறிவை வளர்க்கும் புத்தகங்கள் நிறைந்த வாசகசாலை யொன்று அமைத்துள்ளது. இளைஞர்களின் பெருமுயற்சியால் ரூ. 100 வசூல் செய்யப்பட்டது. தேசிய வளர்ச்சித் திட்டத்திலிருந்தும் மிக நல்ல புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை படியாதவர்கள் இதிலே பயனடைய முடியாதே என்று சிலருக்குச் சந்தேகம். அதற்கும் இங்கே இடமில்லை. 'இரவு பள்ளி' ஆரம்பிக்கப்பட்டு இந்தப் பிரச்சினையைப் போக்கப் பாடுபட்டு வருகிறது. கல்வி !—அது நமக்கு இன்பவாழ்வின்போது ஓர் அணிகலமாக விளங்கி ஆனந்த மூட்டுகிறது. ஆனால் துன்ப வாழ்வின் போதோ நமக்கே அடைக்கலம் தந்து ஆதரவும் தருகிறது. இத் தகைய கல்வியின் மேம்பாட்டை உணர்ந்து நடக்கும் அந்த இரவு பள்ளியின் நோக்கம் பாராட்டிற்குரியதே.

" ஓடி விளையாடு பாப்பா........நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா "—என்று பாரதியார் விளையாட்டை எவ்வகையிலே முக்கியத்துவம் கொடுத்துப் பாடினாரோ, இங்கே அதற்கும் முன்னணி தயாராகி இருக்கிறது. தேசிய வளர்ச்சித் திட்டத்திலிருந்து நல்ல விளையாட்டுக் கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த இடத்திலேயே ஒன்று கூற விரும்புகிறேன். வருங்கால பாரத ரத்தினங்கட்கு மாலையிலே விளையாடித்தான் நேரத்தை பயனுள்ளதாகவும், உற்சாகமாகவும் கழிக்க முடியுமென்றில்லை. இவ்வூர் சமூக சேவா சங்கத்திற்குத் திட்டத்திலிருந்து கடப்பாரை, மண்வெட்டி, கூடை கொந்தாளம், வாளி, பெருக்கும் சாதனங்கள் இவையனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வப்போது சேரி, வீதிகளை சுத்தம் செய்யும் பணிக்கு இவை பயன்படுகின்றன. இந்த முறையிலே காலம் களிப்புடன் செலவழிக்கப்படுவதை இவ்வூர் இளைஞர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

இதுவரை கவனிப்பாரற்றுக் கிடந்த கூட்டுறவு சங்கத்தை எங்கள் கூட்டுறவு வளர்ச்சித்திட்ட அதிகாரி புதுப்பித்து வைத்தார். மக்களின் மன நிலையை ஒரு நிலைப்படுத்த இது ஒரு சாதனமாக இருந்து பெரும் சாதனைகட்கு அடிகோலுகிறது. இந்த ஊரின் பெருந்தொகையான நெசவாளிகள் இதனால் பயனடைந்து வருவது கண் கூடு.

குறுகிய காலத்திலே திட்டத்தில் என்னென்ன அபிவிருத்தி வேலைகள் செய்ய முடியுமோ, அவை பூராவையும் நம் முத்துக்கவுண்டன்பாளையம் செய்து முடித்திருக்கிறது.

அப்போது, தொடக்கத்திலே ஊரில் இருந்த சண்டை, சச்சரவு, உள்ளப் பாகுபாடு இவைகளை நினைத்துப் பார்த்தால்......அடேயப்பா......இது ஒரு பெரும் சாதனை தான். ஆரம்பத்திலே குறிப்பிட்ட நமது கருப்பண்ண கவுண்டரைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை யென்று நினைக்க வேண்டாம். இப்போது அவர் ஊரின் நல்லது அத்தனைக்கும் தலையசைப்புடன் உதவியும் செய்கிறார் என்பது ஊரறிந்த ரகசியம். இனிமேல் தொடங்கப்போகும் குளம் கட்டும் வேலைக்கு அவர்தான் எல்லோரையும் ஊக்குவித்து, உதவியும் அளிக்க முன்வந்துள்ளார் என்ற ரகசியத்தை உங்களுக்குமட்டும் கூறிவிடுகிறேன்.

குண்டட வட்டாரத்திற்கே எடுத்துக்காட்டாக அமையும் முத்துக்கவுண்டன்பாளையத்தின் முன்னேற்றப் பாதையிலே 'அறியாமைக் கள்ளிகள்' கெல்லப்பட்டு 'ஆதரவு' மண் போடப்பட்டுள்ள . அதன்மேல் 'ஒத்துழைப்பு'க்கல் கொண்டு பண்படுத்தப்பட்டுள்ளது. இப்போது இவ்வூர், அம்முன்னேற்றப் பாதையிலே, தங்கு தடையின்றி இன்னும் முன்னடைய வேண்டும் என்ற உணர்ச்சியும், ஊக்கமும் கலந்த நோக்கத்தோடு தலை நிமிர்ந்து செல்கிறது என்பதுடன், தேசிய வளர்ச்சித் திட்டத்தைப் பயன்படுத்தி மற்ற கிராமங்களும் தன்னைப்போல் பயனடைய வேண்டும் என்ற எண்ணமும் அதற்கு இருக்கிறது எனத் தெரியும்போது, " வாழ்க, முத்துக்கவுண்டன்பாளையம் "! என நாம் வாழ்த்தத்தானே செய்வோம்.

காளையார்கோவில் வட்டாரம்

இவ் வட்டாரத்தின் துவக்க விழா, 1956 ஏப்ரல் முதல் தேதியன்று, பல்லிதர்மம், மங்கலம், பால்குளம், உடப்பு, காளையார்கோயில், விட்டநேசி, நாட்டரசன்கோட்டை, நகரம்பட்டி, பாகனேரி முதலிய ஊர்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு வந்து குழுமிய சிறுவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

தேவகோட்டை வட்டாரம்

இவ் வட்டாரத்தின் துவக்க விழா, திருவேகம்பத்து, கந்ததேவி, கண்ணங்குடி ஆகிய ஊர்களில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பள்ளிச் சிறுவர்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டார்கள்.

திருப்பூர் வட்டாரம்

இவ் வட்டாரம், 1956, ஏப்ரல் முதல் தேதியன்று, சமுதாய நலத் திட்ட வட்டாரமாக மாறியது. துவக்க விழா, நெருப்பரிச்சல், நம்பியார்புரம், வாவிபாளையம் முதலிய ஊர்களில் விமரிசையாகக்கொண்டாடப்பட்டது.

Printed by the Superintendent, Government Press, Madras, Edited by the Public Relations Officer and published by the Additional Development Commissioner, Government of Madras.